# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு | குரல் 3 | ஜுலை 1984 | அன்பளிப்பு ரூ 2


# நிர்மலா சிறைமீட்பு



**கடுமையான காவல் பந்தோபஸ்துகள் கொண்ட மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிர்மலா நித்தியானந்தனை தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடிப் படைப்பிரிவினர் மிகவும் நுட்பமான, சாதுர்யமான இராணுவ நடவடிக்கை மூலம் சிறை மீட்டனர். தமிழீழப் புரட்சிகரப் போராளியான நிர்மலா நித்தியனந்தன் சிறீலங்கா அரசின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் இருபது மாத காலம் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் காயமுற்ற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புகலிடம் வழங்கினார் என்றும், விடுதலைப் போராளிகளைப் பற்றிய தகவல்களை அறிந்திருந்தும் பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை என்றும் நிர்மலா நித்தியானந்தன் அவரது கணவ[illegible] கைது செய்யப்பட்டார். [illegible] இராணுவ [illegible]மில் சில காலம் தடுத்து வைக்கப்பட்டு, [illegible]டார். வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடைபெற்ற படுகொலைகளிலிருந்து உயிர் தப்பிய இவர் பின்பு மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.**

1983 செப்டம்பர் 23ம் திகதி மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து தமிழ்ப் போராளிகள் தப்பி வெளியேறியபோது நிர்மலா மட்டும் தப்பி வெளியேற முடியாத துரதிர்ஷ்டம் சம்பவித்தது. இந்நிகழ்ச்சிக்குப்பின் சிங்கள இராணுவ அதிரடிப் படைப் பிரிவு நிரந்தரமாகவே நிறுவப்பட்டு, மட்டக்களப்பு சிறைச்சாலை கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டது. நிர்மலாவை மீண்டும் சிறைச்சாலையிலிருந்து மீட்டெடுப்பது சாத்தியமில்லை என்ற நிலைமையே பொதுவாக நிலவியது. ஆயினும் மட்டக்களப்புச் சிறைச்சாலை மீது தமிழீழ விடுதலைப் புலிகள் சடுதியான, துணிகரமான தாக்குதலை மேற்கொண்டு நிர்மலாவை சிறைச்சாலையிலிருந்து மீட்டெடுத்தனர்.

1984 ஜுன் மாதம் 15ம் திகதி கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை மேற்கொள்வதற்காக நிர்மலா நித்தியானந்தனைக் கொழும்பிற்கு கொண்டு செல்ல ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்தது. அதற்கு முன்னதாக நிர்மலாவை மீட்கும் திட்டத்தை விடுதலைப் புலிகள் துரிதப்படுத்தினர். ஜுன் மாதம் 10ம் திகதி இரவு 7-15 மணி அளவில் நவீனரக ஆயுதந்தாங்கிய விடுதலைப் புலிகளின் கொரில்லா வீரர்கள் 15 பேர் இந்த துணிச்சல் வாய்ந்த நடவடிக்கைக்காகக் களத்தில் இறங்கினர். சிறைச்சாலையைச் சுற்றிலும் முக்கிய நிலையங்களில் கொரில்லா வீரர்கள் நிறுத்தப்பட்டனர். சிறைக் காவலர்களின் சீருடையில் சென்ற கொரில்லா வீரர்கள் கொழும்பிலிருந்து சில கைதிகளை மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தாம் அனுமதிக்கக் கொண்டு வந்திருப்பதாகக் கூறி உள்ளே காவல் நின்ற சிறையதிகாரிகளை நம்பச் செய்து கதவைத் திறக்கச் செய்தனர். முதலாவது பிரதான கதவு சாடைமாடையாகத் திறக்கப்பட்டு கொரில்லா வீரர்கள் சிறைக்குள் நுழைவதற்கிடையில் சிறை உடைப்பு நிகழ்கிறது என்பதை ஊகித்துக் கொண்டுவிட்ட சிங்களச் சிறை அதிகாரிகள் மூவரும் சடுதியாகக் கதவை மூட முயன்றதுடன் எமது கொரில்லா வீரர்களுடன் மோதவும் முயன்றனர். சிறைக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைத் தவிர்த்துக் கொண்ட எமது கொரில்லா வீரர்கள் உக்கிரமான கைகலப்பினை அடுத்து சிறை அதிகாரிகளை மடக்கினர். இந்த மோதலில் இரண்டு சிறைக் காவல் அதிகாரிகள் கடுமையாக காயமுற நேர்ந்தது.


சிறைச்சாலைக்குள்ளேயும் காவல் பந்தோபஸ்து தீவிரமாக இருந்ததால் இரண்டாவது இரும்புக் கதவுக்குரிய திறப்பை சிறை அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாது போயிற்று. இந்நிலையில் எமது கொரில்லா வீரர்கள் இரும்புக் கதவை உடைத்தே திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்தது. விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலைக் கண்டறிந்த பிற காவல் அதிகாரிகள் பீதியில் பயந்து ஓடி ஒளிந்துகொண்டனர்.

இரும்புக் கதவை உடைத்துக் கொண்டு உள் நுழைந்த எமது கொரில்லா வீரர்கள் பெண் கைதிகள் பகுதிகளுக்கான கதவையும் உடைத்தே உள்நுழைந்தனர். ஆனால் நிர்மலாவின் அறைக் கதவுக்கான திறப்பைக் கொண்டிருந்த அதிகாரி ஓடி ஒளிந்து கொண்டதால், நிர்மலாவின் அறை [illegible] கதவையும் எமது [illegible] தமிழீழ விடுதலைப் [illegible] புரட்சிகர ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைச் சேர்க்கிறது.

அநீதியான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் முதல் பெண்மணியாக நிர்மலா 1982 நவம்பரில் சிங்கள இராணுவத்தால் சிறை வைக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் அலைகளின் மையமாக இவர் திகழ்ந்தார். இவர் கைது செய்யப்பட்டமை விடுதலைப் புலிகள் முன்னெடுத்து நிற்கும் புரட்சிகர ஆயுதப் போராட்டத்திற்கு புத்திஜீவிகள் நல்கி வருகின்ற பரந்த ஆதரவுக்கு எடுத்துக் காட்டாகவும் அமைந்தது.

சோசலிசத் தமிழீழத்திற்காகவும், பெண் விடுதலைக்காகவும் அயராது பணியாற்றும் நிர்மலா கைது செய்யப்பட்டதும் அவரை விடுதலை செய்யுமாறு கோரி தமிழீழமெங்கும் பெருமளவிலான வெகுசனப் போராட்டங்கள் நடைபெற்றன. மனிதாபிமான அடிப்படையில் நிர்மலாவை விடுதலை செய்யக்கோரி இலங்கையிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் முற்போக்கான மனித உரிமை இயக்கங்கள் ஜே. ஆர். ஜயவர்த்தனவிற்கு உருக்கமான வேண்டுகோள்கள் விடுத்தன. ஆனால் ஜே. ஆரின் பாசிச அரசோ இந்த வேண்டுகோள்களை உதாசீனம் செய்தது. இராணுவ முகாமிலும் சிறைச்சாலையிலும் நிர்மலா முற்றிலுமாகத் தனிமையிலேயே விடப்பட்டிருந்தார். சிறையில் ஆஸ்துமாவினால் அவர் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகிய சந்தர்ப்பங்களில் போதுமான மருத்துவ வசதிகளை வழங்குவதற்குக்கூட ஸ்ரீலங்கா அரசு முன்வரவில்லை. வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடைபெற்ற படுகொலைகளிலிருந்து உயிர்தப்பிய நிர்மலா பின்னர் மட்டக்களப்புச் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டார். முதலாவது மட்டக்களப்புச் சிறைத் தகர்ப்பின்போது தப்பி வெளியேறிவிடத் தீர்மானித்திருந்த நிர்மலா திட்டத்தை நடைமுறைப் படுத்தியவர்களின் [illegible] நிர்மலா[illegible] மீட்பதற்காக விடுதலைப் புலிகள் [illegible] செயற்பட்டு வந்தனர். இந்நிலையில் நிர்மலா உட்பட இருபது அரசியற் கைதிகளை விடுதலை செய்யக் கோரி அலென் தம்பதிகளைக் கடத்திய நாடகம் முடிந்தது. இந்த வெற்று நாடகத்தால் விடுதலைப் புலிகளின் நிர்மலாவைச் சிறை மீட்கும் திட்டம் பிரச்சினைக்குள்ளாகியது. எனினும் நிர்மலா போன்ற ஒரு பெண் போராளிக்குரிய முக்கியத்துவத்தை உணர்ந்திருந்த எங்களின் புரட்சிகர இயக்கமே இந்தச் சிறை உடைப்பினை மேற்கொண்டு நிர்மலாவை ஸ்ரீலங்கா அரசின் இனவெறிப் பிடியிலிருந்து மீட்டெடுத்தது. O

1. இராணுவ காவற் கூடம்
2. பிரதான வாசல்
3. இரும்புக் கதவு
4. பெண்கள் சிறைக்கூடத்துக்கான இரும்புக் கதவு
5. நிர்மலா நித்தியானந்தம் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையின் மரக் கதவு
6. பெண்கள் வார்டு




## காப்டன் ரஞ்சன் மறைவு



சிறீலங்கா இராணுவத்தின் மீது புலிகள் நடாத்திய முதலாவது கொரில்லாத் தாக்குதலிலிருந்து சகல இராணுவ நடவடிக்கைகளிலும் பங்கேற்ற புரட்சிகரப் போராளி ரஞ்சன் (லாலா) தனது 23வது வயதில் சிங்கள இராணுவத்தின் வெறியாட்டத்திற்குப் பலியானார்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

LIBERATION TIGERS OF TAMIL EELAM

# புலிகளின் குரல்

## பேச்சு வார்த்தை என்ற நாடகத்தின் பின்னால்-

வட்டமேசை மகாநாட்டுப் பேச்சுக்களால் ஈழத் தமிழர் பிரச்னைக்கு எவ்வித உருப்படியான தீர்வும் ஏற்படப் போவதில்லை எனப் பேச்சுக்கள் ஆரம்பமான காலத்திலிருந்தே நாம் தீர்க்கதரிசனத்துடன் கூறியிருந்தோம். இந்தப் பேச்சு வார்த்தை நாடகத்தினை ஒரு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக நாம் என்றும் கருதியதில்லை.


தமிழர் பிரச்னைபற்றிய பேச்சுக்கள் இன்று நேற்று ஆரம்பமானதல்ல. கடந்த கால்நூற்றாண்டு காலத்திற்கு மேலாக இழுபட்டுவரும் ஒரு விவகாரம் இது. 1957ம் ஆண்டு செய்யப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து இன்று வரை இப்பேச்சுக்களுக்கு ஒரு முடிவில்லாத, முற்றுப்பெறாத, தொடர்ந்த வரலாறு உண்டு. இந்த வரலாற்று அனுபவம் மிகவும் கசப்பானது; நயவஞ்சகம், நம்பிக்கைத் துரோகங்கள் நிறைந்தது. ஒப்பந்தங்கள் செய்வதும், ஒப்பந்தங்களை முறிப்பதும், சலுகைகளைக் கொடுப்பதும் சலுகைகளை எடுப்பதும், எழுத்தில் கொடுப்பதும் செயலில் மறுப்பதும் - இப்படியாக தமிழினம் சதா ஏமாற்றப்பட்ட வரலாறு. இந்த ஏமாந்த வரலாற்றின் கதாநாயகர்கள்தான் இன்றும் இந்த அரசியல் நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். 27 வருட வரலாற்று அனுபவத்தில் நம்பிக்கெட்டு வழுக்கை விழுந்தும் இன்னும் இவர்களுக்கு நம்பிக்கை தளரவில்லை. ஆனால் இன்று இந்தப் பேச்சுவார்த்தை நாடகம் [illegible] முடிவில் [illegible] ஆகிறது. புரட்சிகரப்-புதிய [illegible] [illegible] அரசியல் மேடையில் தோற்றம் [illegible] [illegible] [illegible] [illegible] படுத்தியது.

[illegible] உலகளாவிய ரீதியில் சிங்கள இனத்திற்கு ஏற்பட்ட அவமானத்தையும் இழுக்கையும் துடைத்துவிடும் நோக்குடனேயே இப்பேச்சு வார்த்தை நாடகத்தை மேடையேற்ற சிங்கள அரசு இணங்கியது. அன்று தமிழரின் இனக்கொலையாக விஸ்வரூபம்கொண்ட பிரச்னையை படிப்படியாகத் திசைமாற்றி, இன்று அதனை தமிழரின் 'சர்வதேச பயங்கரவாதம்' என்ற ரீதியில் கதையைத் திரிபுபடுத்தியிருக்கிறது சிங்கள அரசு. வட்ட மேசைமீது சதுரங்கக் குந்துக்கரணங்களைப் போட்டு காலத்தை விழுங்கியதில் ஜெயவர்த்தனாவின் ராஜதந்திரம் வெற்றியளித்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். இந்தக் கால விரிப்பில் சிங்கள இராணுவ பூதம் புத்துயிர்பெற்று தமிழீழத்தின் தொண்டையைத் திருகும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது.

சிங்கள இனவாத ஆளும்வர்க்கமானது தமிழர் பிரச்னையை தீர்ப்பதில் எவ்வித அக்கறையையும் கொண்டிருக்கவில்லை என்பது எமக்கு நன்கு தெரியும். இனப் பிரச்னையை மேலும் கூர்மையாக்கி, சிங்களப் பேரினவாதச் சித்தாந்தத்தில் சிங்கள மக்களை சிறைப்படுத்திவைத்து, ஆட்சிபீடத்தில் தொடர்ந்து அமர்ந்திருப்பதே சிங்கள ஆளும்வர்க்கத்தின் அபிலாசை. தமிழர் பிரச்னை மேலோங்கி இருக்கும்வரை, சிங்கள இனவாத எழுச்சி வர்க்க முரண்பாடுகளை மறைத்து வர்க்கப் போராட்டத்தை தணித்துவிடும்வரை முதலாளித்துவ அரச அதிகாரத்திற்கு ஆபத்து ஏற்படாது என்பதை ஆளும் வர்க்கம் நன்கு அறியும். அதனால் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதை அவர்கள் விரும்பப்போவதில்லை. தமிழர் தேசியப் பிரச்னை தீர்ந்துபோகும் பட்சத்தில் நாட்டில் தாண்டவமாடும் பூதாகரமான பொருளாதாரப் பிரச்னைகள் மேலோங்கும்; சிங்களப் பாட்டாளி வர்க்கம் விழிப்புணர்வு கொண்டு வர்க்க முரண்பாடுகளின் நிதர்சனத்தைக் கண்டு கொள்ளும். இதனால் அரசுக்கு எதிரான ஒரு புரட்சி வெடிக்கும் ஆபத்து தோன்றும். அரசு கவிழ்ந்துபோகும் இந்தப் பேராபத்து ஏற்படாமல் செய்வதாயின் தமிழர் பிரச்னைக்கு தீர்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இதைத்தான் சிங்கள அரசு செய்துவருகிறது.

தமிழர் தேசியப் பிரச்னை இன்று ஆயுதம்தரித்த விடுதலைப் போராட்டமாக விஸ்தரிப்படைந்து வருகிறது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. இந்த ஆயுதப் போர் சிங்கள அரசுக்கும் தமிழ் விடுதலைப் போராளிகளுக்கும் மத்தியிலானது. தமிழ் விடுதலைப் போராளிகளே இன்று ஈழத் தமிழரைப் பிரதிபலிக்கும் அரசியல் சக்தியாக, மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார்கள். எனவே, எதிர்கால தமிழ் அரசியல் வரலாற்றின் கதாநாயகர்கள் அவர்களே. கூட்டணித் தலைமை அல்ல.

## லண்டனில் புலிகளின் ஊர்வலம்




அண்மையில் பீட்டர் போத்தா லண்டனுக்கு விஜயம் மேற்கொண்ட போது ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸுடன் (ANC) இணைந்து நிற வெறிக்கு எதிராகத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆர்ப்பாட்டம் நடக்தும் காட்சி.

# நியூயார்க் மாநாடு பிரபாவின் கடிதம்

19. 05. 84.
தமிழ் ஈழம்.

அன்பின் டாக்டர் பஞ்சாட்சரம் அவர்களுக்கு,

உங்களது அன்பான கடிதம் கிடைக்கப்பெற்றேன். மிகவும் நன்றி. பதில் எழுத தாமதமாகியதற்கு மன்னிக்கவும். வேலைப் பளு காரணம். தமிழீழம் என்ற இலட்சியத்திற்காக தாங்கள் ஆற்றிவரும் தன்னலமற்ற சேவையை நான் நன்கு அறிவேன். அமெரிக்காவில் வதியும் தமிழர்கள் அந்நிய ஆளாச்சாரத்தால் ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுத்து, தமிழ்த் தேசாபிமான உணர்வைத் தட்டியெழுப்பி, [illegible] தமிழரினத்திற்குத் தனியாசே இறுதியான தீர்வு என்பதில் உறுதியாக நின்று நீங்கள் செய்து [illegible] தொண்டை நான் பாராட்டுகிறேன்.

[illegible] மிழ் [illegible] ட்டுவதற்கு நீங்கள் இப்பொழுது [illegible] [illegible] ழுடன [illegible] [illegible] ம் மாநாட்டில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். இவ்விசயத்தில் எமது இயக்க நிலைப்பாட்டையும், தமிழினத்தின் தற்போதைய நிலவரத்தையும், எமது விடுதலையை முன்னெடுப்பதற்கான இன்றைய தேவைகளையும் நான் உங்களுக்கு எடுத்து விளக்குவது அவசியமாகிறது.

தமிழீழத்தில் இன்று இராணுவ அராஜகம் தலைவிரித்தாடுகிறது. தமிழீழப் பகுதிகளில் சிங்கள ஆயுதப்படைகள் சதா குவிக்கப்படுகின்றன. நவீன ரகமான ஆயுத தளபாடங்களும் புகுத்தப்படுகின்றன. கடலாலும் நிலத்தாலும் தமிழீழம் முற்றுகையிடப்பட்டிருக்கிறது. பாதுகாப்பற்ற சூழ்நிலையில் தமிழ் மக்கள் பயந்து வாழ்கிறார்கள். இராணுவ அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் இருக்கிறது. இதுதான் இன்றைய நிலை. இந்நிலையில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதாயின் ஒரு பலம் வாய்ந்த இராணுவ அமைப்பை நாம் கட்டி எழுப்பவேண்டும். தமிழீழ விடுதலைக்கு இன்று அத்தியாவசியமான தேவை இதுவாகும். இந்த இலக்கில்தான் எமது முழு முயற்சியும் இன்று பிரயோகிக்கப்படுகிறது. இந்த இலக்கை நாம் அடைவதற்கு வெளிநாடுகளில் வதியும் தமிழீழ தேசபக்தர்களின் உதவியும் ஒத்தாசையும் இன்றியமையாதது. இந்த வகையில் நீங்களும் எமக்கு உதவி செய்ய முன்வரவேண்டும்.

தமிழீழத்தில் எமது கெரில்லா அணிகளை விஸ்தரித்து, பலப்படுத்தும் முக்கிய வேலைகளில் நான் ஈடுபட்டிருக்கிறேன். நான் தளத்தைவிட்டு எக்காரணத்தைக்கொண்டும் வெளிநாடுகளுக்கு பயணம் செல்ல முடியாது. இயக்கத்தின் ஏனைய முக்கிய உறுப்பினர்களின் நிலையும் அதுவே. ஆகையால், இயக்கத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதி எவரையும் உங்களது மாநாட்டிற்கு அனுப்ப முடியாத நிலையில் இருக்கிறேன். இதனை நீங்கள் புரிந்து கொள்வீர்களென நினைக்கிறேன்.

விடுதலை இயக்கங்களை ஒன்றிணைத்து ஒரு தேசிய அரசியல் இராணுவத் தலைமையை உருவாக்குவது மாநாட்டின் நோக்கங்களில் ஒன்று என்பதாகத் தெரிகிறது. இவ்வித ஒற்றுமை முயற்சிகளை நான் வரவேற்கிறேன். எனினும் இந்த முயற்சிகள் தமிழீழத்தில் மேற்கொள்ளப்படுவதையே நான் விரும்புகிறேன். தமிழ் நாட்டில் நிரந்தரமாக நிலைகொண்டுள்ள விடுதலைக் குழுக்களும் அதன் தலைமைகளும் தமிழீழம் வந்தாகவேண்டும். தமிழீழப் போராட்டக் களத்திலிருந்து ஒற்றுமைபற்றி பேசுவதற்கு நாம் தயார். ஆனால் அந்நிய நாடு ஒன்றில், அதுவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைநகரில், சி. ஐ. ஏ. உளவு ஸ்தாபனத்தின் சிலந்தி வலைக்குள் இருந்து எமது போர்முறைத் திட்டங்கள் பற்றி பேசுவதற்கு நாம் தயாரில்லை. விடுதலை இயக்கங்கள் மத்தியில் சோசலிசத் தமிழீழம் என்ற இலட்சியத்தில் ஒருமைப்பாடு உண்டு என்பது நீங்கள் அறியாததல்ல. எனினும் இந்த இலட்சியத்தை அடைவதற்கான போருபாயங்களிலும், பொதுவான போர்முறைத் திட்டத்திலும் கருத்துவேறுபாடுகள் உண்டு. இது மிகவும் சிக்கலான விவகாரம். போர் நுட்பமும், போர் அனுபவமும் சார்ந்த விசயம். இயக்கத் தலைமைகள் மிகவும் இரகசியமாக, பரஸ்பர நம்பிக்கையுடன் பரிமாறிக்கொள்ள வேண்டியது. இவற்றை எல்லாம் சர்வதேச மகாநாடுகளில், அதுவும் அமெரிக்காவில், திறந்த அரங்குகளில் விவாதிக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதாயின் மிகவும் கட்டுப்பாடுடைய தேசிய இராணுவ அமைப்பு ஒன்றை முதலில் கட்டி எழுப்ப வேண்டும். இதனையே நாம் இன்று செயற்படுத்தி வருகிறோம். ஏனைய விடுதலை அணிகளும் எம்மோடு இணைந்து செயற்படும் காலம் வெகுதூரத்திலில்லை. போராட்ட சூழ்நிலைகள் இந்த ஒற்றுமையை பிறப்பிக்கும். விடுதலை அமைப்புக்கள் மட்டுமன்றி வெகுசனங்களுமே போராட்டத்தில் நேரடியாக குதிக்க வேண்டி நேரிடும்.

எமது விடுதலை இயக்கம் ஒரு தேசியப் பாதுகாப்பு நிதியை ஆரம்பித்திருக்கின்றது. இது பற்றிய எனது விபரமான அறிக்கை எமது இயக்கப் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அதனை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். இந்நிதிக்கு அமெரிக்காவிலுள்ள தமிழீழ விடுதலை விரும்பிகள் தம்மாலான நிதி உதவியை செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன். யுத்த காலத்தில் மக்களின் பாதுகாப்பு திட்டமொன்றை செயற்படுத்தவே இந்நிதிதேவையாகிறது. இன்று நாம் ஒரு தேசிய விடுதலை யுத்தத்திற்கு தயாராகிவருகிறோம். இந்த யுத்தத்திற்கு வெளிநாட்டுத் தமிழரின் நிதி உதவி அத்தியாவசியம். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அவர்கள் செய்யகூடிய அளப்பரிய சேவையும் அதுவே. **இதைவிடுத்து, ஆடம்பரமான மகாநாடுகளை நடத்தி அநியாயமாகப்பணம் செலவு செய்யப்படுவதை இந்நெருக்கடியான கால கட்டத்தில் நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பதில் இப் பணம் விடுதலைப் போராளிகளின் கையில் ஆயுதங்களாக திகழ வேண்டும். அதுவே எமது வெற்றியை ஊர்ஜிதப்படுத்தும்.**

அன்பு வணக்கம் கூறி முடிக்கிறேன்.
புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்.

இங்ஙனம்,
வே. பிரபாகரன்
தலைவர், இராணுவத் தளபதி,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

## பள்ளிச்சிறுவனின் பார்வையில் பயங்காவாதம்



யாழ்ப்பாணம்
23.2.85

அன்புள்ள சின்னம்மா அறிவது,

நானும் அம்மாவும் கொழும்புக்கு போய் ஆசையம்மா வீட்டில் நின்றோம். அப்பு நங்கை சேரன் சுகமாக இருக்கிறீர்களா? நல்லாய் விளையாடுகிறார்களா? நான் கேட்டேன் என்று சொல்லுங்கோ எல்லாருக்கும் சுகம் சொல்லவும். கொழும்பில் தெகிவலை மிருகக்காட்சிசாலை விடுமுறைக்கு திறந்துவிட்டு இருக்கிறது. ஒரு நாள் போய் எல்லாம் பார்த்தோம். சிங்கம், புலி, கரடி எல்லாம் இருந்தது. அப்பாவையும் வெலிக்கடை சிறைச்சாலையில் போய்ப்பார்த்தோம். ஆமி வந்து அப்பாவை பிடித்துக்கொண்டு போனது. உங்களுக்கு தெரியும் தானே, நான் ஸ்கூல் ஆலை வந்து விளையாடிக்கொண்டு இருந்தேன். காரிலையும் ஜீப்பிலையும் ஆமி வந்து இறங்கி கன்னோடு நின்றாங்கள் அப்பாவை கூட்டிக் கொண்டு போனாங்கள். நானும் வாறன் என்று கேட்டேன். அப்பா சொன்னார் நீங்கள் நில்லுங்கோ. நான் போயிட்டு வாறன் என்று. பிறகு அப்பா வீட்டிலால வந்தா. நானும் ஜீப் ஓட ஓடிப் போய் சொன்னேன். அப்பாவை ஆமி கூட்டிக்கொண்டு போயிட்டு. அப்படி சொன்னது இல்லை பொய் என்று. மாமி சொன்னது இல்லை உண்மைதான். அம்மா அழுதா. அப்பா எப்போ வருவார் அம்மா என்று நான் கேட்டேன். நானும் அழுதேன். வதனி ஆன்டி அழ வேண்டாம். யாரிட்டையோ போவோம் என்று சொல்லுது. குருநகர் ஆமி காம்புக்கு அப்பாவைப் பார்க்க அம்மாவும் நானும் போனோம். ஆமி எல்லா இடமும் கன்னோடு நின்டது. எனக்கு பயமாக இருந்தது. ~~அது~~ கொஞ்ச நேரம் கதைக்க விட்டார்கள். இப்போ அப்பாவை வெலிக்கடைக்கு கொண்டு போனார்கள். அப்பா இருக்கும்போது [illegible]
அப்பா மாடன் பேக்கரியில் ஐஸ்கிறீம் வாங்கித் தருவார். [illegible]
[illegible] ஸ்கூலிலே கமலி அப்பாட படம் பேப்பரில் இருந்தது என்று சொல்லி வந்து காட்டினது. எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இப்ப வீட்டில் பெரிய டல்லாக இருக்கிறது. விடுமுறை விட்டதும் உங்களை பார்க்க வருவோம்.

இப்படிக்கு
அன்புள்ள மகன்
Jesi.

## தமிழீழப் போராட்டம் பயங்கரவாதமல்ல

"சிறீலங்கா அரசு பயங்கர வாதம் என்று அழைப்பது உண்மையில் ஒரு அரசியல் தோற்றப்பாடே தவிர பயங்கரவாதமல்ல" என்று 'சிறீலங்காவின் நெருக்கடி தொடர்கிறது' என்ற தலைப்பில் வெளியான **இந்து** பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் (ஜுலை 7, 1984) கருத்துத் தெரிவிக்கிறது. சிறீலங்கா அரசாங்கம் சட்ட ரீதியான வழிகளில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் கண்ட தொடர்ச்சியான தோல்விகள்தான் தீவிரவாதத்தின் வளர்ச்சிக்கும் ஆயுதம் தாங்கிய போராட்ட வடிவங்களுக்கும் இட்டுச் சென்றன என்று **இந்து** மேலும் சுட்டிக் காட்டுகிறது. **இந்து** மேலும் கூறுவதாவது :

'இதில் இரண்டாவது அம்சம் யாதெனில் 'பயங்கரவாதம்' என்கின்ற பூச்சாண்டியை வைத்து இந்தியாவைச் சங்கடத்தில் சிக்க வைக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் இறங்கியுள்ளது.' 'பயங்கரவாதம்', 'பயங்கரவாதிகள்' என சிறீலங்கா அரசு முந்திக்கொண்டு கூற விழைவதன் நோக்கம் தமிழர் பிரச்சினை பற்றிய சர்ச்சைகளைத் திசை திருப்பி விடுவது தான். ஆனால் உண்மையில் தமிழ் இளைஞரிடையே எழுந்திருக்கும் தீவிரவாதம் அடிப்படையில் ஒரு அரசியல் தோற்றப்பாடுதான் என்பதும், முதிர்ந்து வரும் நெருக்கடி நிலைமைகளைப் பிரதிபலிக்கும் ஒரு தோற்றப்பாடு என்பதும் அவசியமாகத் தெளிவாக்கப்பட வேண்டிய விஷயம். எப்போது சட்ட பூர்வமான வழிகளில் தீர்வுக்கான முன்னேற்றம் தடைப்படுகின்றதோ, எப்போது சாதாரண, நியாயபூர்வமான அரசியல் எதிர்பார்ப்புகள் கூடத் தொடர்ந்து ஏமாற்றத்தைத் தருகிறதோ, எப்போது அரசியல் விளையாட்டரங்கின் நியாயமான எதிர்பார்ப்புகளினூடும் தீர்வு எதுவும் தென்படவில்லையோ அப்போது தீவிரவாதம்---வன்முறை சார்ந்த தீவிரவாதம் உட்பட---செழித்து வளர்வதற்கான நல்ல விளைநிலமாக சூழ்நிலைகள் அமைந்து விடுகின்றன என்பதைத்தான் வரலாற்று அனுபவங்கள் வெளிப் படுத்துகின்றன.'

ஜயவர்த்தன பேச்சு வார்த்தைகளின் மூலம் தமிழர் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வொன்றை ஏற்படுத்துவதில் உண்மையான நோக்கங்கொண்டவர் அல்லர் என்று வாதிடும் இப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:

"ஜே. ஆர். ஜயவர்த்தனவின் பழமைவாத அரசாங்கம் பேச்சு வார்த்தைகளைக் கீழறுத்து விடுவதற்கு மிகுந்த பிரயத்தனம் எடுத்து வருகிறது. ஒரு வருடத்திற்குமுன் தமிழருக்கெதிராக இன ஒழிப்புக்கான திட்டமிட்ட படுகொலைகளும் பாரியளவில் உயிர் உடமைகளுக்கு விளைவிக்கப் பட்ட சேதங்களும், தொழில் செய்து வாழ முடியாத நிலைகளும் அரசின் ஆதரவுடன் நடாத்தப் பட்டன. நாம் முன்னெப்போதும் கண்டிராதவாறு சிறுபான்மையினர் வேரோடு பிடுங்கப்பட்டு இடம் பெயர்க்கப்பட்டனர். இத்தகைய நிகழ்வுகளின் பின் கூட அரசாங்கம் பிரச்சினைக்குத் நாவக நியாயமான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லையென்றே தெரிகிறது. இந்நிலைமைகளில் இந்தியா காட்டிய நல்லாதரவு மிக முக்கியமான, சாதகமான அம்சமாக அமைந்த போதிலும் திரு. ஜயவர்த்தன நேரத்துக் கொன்றைக் கூறி, தன் நிலைப் பாட்டை அடிக்கடி மாற்றி வந்துள்ளார். இதனால் இலங்கை, இந்தியா இரு நாடுகளிலுமுள்ள தமிழ் மக்களுக்கு, இப்பிரச்சினையில் இவரது ஒட்டுமொத்தமான அணுகுமுறை பற்றி மதிப்பீடு செய்வதும் இவ்வணுகு முறையின் நல்லெண்ணம்---அப்படி ஏதாவது உண்மையில் இருந்தால்---பற்றி நம்பிக்கை வைத்தலும் கஷ்டமாகிறது.

## அரபு பார்வையில் சிறீலங்கா.

சிறீலங்காவின் ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் மீது பழி சுமத்தும் அவரின் மோசமான எதிரிகள்கூட அவர் பிரச்சினைகளை ஒரு வகைத் தந்திரத்துடன் கையாள்பவர் பதிலை ஏற்றுக் கொள்வார்கள். வட மாகாணங்களில் காணப்படும் தமிழர் பிரச்சினைகளை அவர் கையாண்ட விதம் குழப்பத்தில் முடிந்திருக்கிறது. தமிழர்களும் இணைந்து வாழுகின்ற ஒரு தேசத்தின் தலைவராக இல்லாமல், சிங்கள இனவாதிகளின் கொடியின் கீழ் பயணம் செய்பவராகத் தன்னைக் காட்டிக் கொண்டதால் பிரச்சினையை அவர் இன்னும் மோசமாக்கியிருக்கலாம். ஆனால், பயங்கரவாதிகளை அடக்கும் விடயத்தில் இஸ்ரேல், அதாவது பயங்கரவாதத்திலேயே பிறந்து, பயங்கரவாதத்தாலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் இஸ்ரேலை யாரும் மிஞ்சிவிட முடியாது என்பதை ஜயவர்த்தன நன்கறிந்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பலத்த கண்டனத்திற்கும், நாடளாவிய எதிர்ப்புக் குரலுக்கும் மத்தியில் சிறீலங்கா அரசாங்கம் வட பகுதிக் கெரில்லாக்களை அடக்குவதற்காக வரையறுக்கப்பட்ட அளவில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவொன்றை ஏற்பாடு செய்வது பற்றி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு தமிழ்ப் பிரிவினைவாதிகளை எதிர்க்க சிறீலங்கா இஸ்ரேலியரின் உதவியை நாடியுள்ளதா என்று ஜனாதிபதி ஜயவர்த்தனாவிடம் ஹொங்கொங்கில் கேள்வி எழுப்பப்பட்டபோது, "முடிந்தால் பேய் பிசாசுகளிடமிருந்தும் நாம் உதவியைப் பெற்றுக் கொள்வோம்" என்று பதிலளித்திருந்தார்.

சிறீலங்கா எந்தவொரு நாட்டுடனும் ராஜதந்திர உறவுகளை நேரடியாக வைத்துக் கொள்வதோ, பின்கதவால் தொடர்பு கொள்வதோ என்பது அதன் சொந்த விஷயம். அத்துடன் தன் அரசின் மிக நுட்பமான, உயிர்நாடியான அம்சத்தை வெளியாரின் ஊடுருவலுக்குத் திறந்து விடுவதும் கொழும்பு அரசாங்கத்தின் தனிப்பட்ட பிரச்சினையே. ஆனால் அராபியருக்கெதிரான காழ்ப்புணர்வை வெளிப்படையாகக் காட்டத் தயங்காத ஒரு நாட்டிற்கு, அராபிய நாடுகளுடன் போரில் ஈடுபடாத காலங்களில் கூட தனிப்பட்ட அராபியர்களுக்கெதிராக ஐரோப்பாவில் தனியான இடங்களில் பழிவாங்கும் வன்செயல்களில் ஈடுபடுகின்ற ஒரு நாட்டிற்கு, இயங்குவதற்கு வசதியாக இன்னுமொரு தளத்தை ஏற்படுத்தித் தருவது எவ்வளவு அபாயகரமானது என்பதை சுட்டிக் காட்டுவது நியாயமானதே. ஐரோப்பிய தலைநகரங்களில் இஸ்ரேல் பல அராபிய தூதுவர்களையும் பாலஸ்தீன தலைவர்களையும் கொன்றொழித்துள்ளது. ஆகவே இஸ்ரேலிய ஆதிக்க வட்டத்தை விரிவுபடுத்த எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் அராபிய நலன்களுக்கு முரணாக அமையும். இதற்கு சிறீலங்கா ஒரு விதி விலக்காக மாட்டாது.

உண்மையில் சிறீலங்காவிற்கும் அரபு உலகிற்குமிடையேயுள்ள நெருங்கிய பொருளாதார வர்த்தக உறவுகளை கவனத்திலெடுக்கும் பொழுது வாளிருக்கும் ஆபத்து மிகப் பெரிதானதாகவும் சியோனிஸ பிரசன்னத்தின் உண்மையான தாற்பரியம் அபாயகரமானதாகவும் தென்படுகிறது. ஜனாதிபதி ஜயவர்த்தன சைத்தானுடன் செல்லமாக விளையாடுவதைக்கூட விரும்பலாம். அதை வெட்கமின்றி வெளியுலகுக்கு பிரகடனஞ்செய்யலாம். ஆனால் அரபு மக்கள் இதைப் பொருட்படுத்தாமலிருக்க முடியாது. காரணம் இப் பிரச்சினை அவர்களுடைய ஜீவ மரணப் பிரச்சினையாகும். சிறிது காலத்தில் அவர் அராபியருக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் ஒரு பக்கத்தை தேர்ந்தெடுக்க நேரிடும். அப்படித் திட்டவட்டமான முடிவெடுக்காத பட்சத்தில் அரபு நாடுகளே மிகுந்த வருத்தத்துடன் அம்முடிவை அவருக்காக எடுக்க வேண்டி வரும்.

## எனக்கும் வேண்டும் விடுதலை!

வானம்பாடி


இளைஞனே,
எங்கோ விரைந்து செல்கின்றாய்
என்னைப் பின்னே விட்டுச் செல்கின்றாய்

கைகளில் மென்வளையலும்
கழுத்தில் தங்க வடமும்
உடலில்
தளிர்பட்டுச் சேலையும்
அழுத்தும் சுமையினால் நான்
சோர்ந்து போனேன்

போதையூட்டும் காதல் வாழ்க்கை கனவுகள்
தெவிட்டி விட்டது எனக்கும்.
பொட்டிட்டு பூவைத்து என்னை
அழகு பார்த்து சிறை வைத்ததுவும் போதும்.

இந்நாட்டின் வீர மக்களை
என் வயிற்றில் சுமந்தேன்.
உன் வயல் வெளிகளில்
உன்னுடன் வியர்வை சிந்தினேன்.
எம் மண்ணின் விடுதலைப் பயணத்தில் நான்
உன்னுடன் கூட வரலாகாதோ?

அன்பனே,
எனக்கும் வேண்டும் விடுதலை!



கஸான் துப்பாக்கி ஏந்தாத ஒரு கமாண்டோ. பேனைதான் இவரது ஆயுதம். ஒரு கமாண்டோத் தாக்குதலுக்கு அஞ்சாத எதிரிகள்கூட இவரது எழுத்துக்கு அஞ்சினுர்கள்.

கஸான் பலஸ்தீனத் தேசபக்தரும் பத்திரிக்கையாளரும் ஆற்றல் வாய்ந்த எழுத்தாளருமாவார். பலஸ்தீன விடுதலை வெகுஜன முன்னணியின் (PFLP) முக்கிய பிரமுகருமாவார். மார்க்ஸியச் சிந்தனேயாளரான கஸான் தனது இலக்கியப் படைப்புகள் மூலம் பலஸ்தீனப் போராட்டத்தை மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் சென்ருர். பலஸ்தீனப் புரட்சிகர இலக்கியத்தில் கஸான் எழுதிய "சாத்தின் உம்மா" (Umm Saad) என்ற நாவல் தனிச் சிறப்பு வகிக்கிறது.

சியோனிச ஆக்கிரமிப்பாளர்களால் தங்கள் சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பலஸ்தீன அகதிகளில் கஸானும் ஒருவர். கஸான் பெய்ரூட்டில் மொசாட் பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார். 1972 ஜுலை 8-ம் திகதி கஸான் பயணம் செய்த காரில் வைக்கப்பட்ட குண்டு வெடித்து கஸானும் அவரது இளைய மருமகளும் மரணமடைந்தனர்.

# ஒரு கொரில்லாவின் தாய்



Ghassan Kanafani



சாத்தின் உம்மா யுகம்யுகமாக எங்கள் குடும்பத்துடன் அல்-கபாசியாவில் வாழ்ந்து வந்தது போலிருக்கிறது. காலங் காலமாக அந்த அகதிகள் முகாமின் அவலம் நிறைந்த வாழ்க்கையை சகித்துக் கொண்டிருந்திருக்கிருள். இப்பொழுதும் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் அவள் எங்கள் வீட்டிற்கு வந்து போவாள். எதைப் பார்த்தாலும் தன் தசையோடு ஒட்டிப்போன ஒன்றைப் பார்ப்பது போலவே இருக்கும் அந்தப் பார்வை. அப்படிப் பிரச்சினைகளில் ஒன்றிப் போகும் உணர்வு அவளுடையது. என்னைத் தன் மகனுகவே கருதி தன் வேதனைகள், சந்தோசங்கள், பிரச்சினைகள் எல்லாவற்றையுமே 'மளமள'வென்று சொல்லித் தீர்ப்பாள். ஆனுல் அவள் ஒரு தடவையாவது முறுமுறுத்துக் கொண்டதில்லை.

அவளுக்கு நாற்பது வயதிருக்கலாம். கற்பாறையின் பலமும் அளவில்லாத பொறுமையும் உடையவள், தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் நேர்மையாக எப்படியோ ஒரு வாய் உணவுக்காவது உழைத்துக் கொள்ளும் முயற்சியில் தினமும் வருவதும் போவதுமாக இருப்பாள். இந்தக் குறுகிய வாழ்க்கையை பத்துத்தரம் வாழ்வது போன்றதொரு பிரயத்தனம் அவளுடையது.

எனக்கு அவளைப் பல வருட காலமாகத் தெரியும். அவள் என் வாழ்க்கையில் ஏதோ ஒன்றைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கிருள். என்னிலிருந்து அவளைப் பிரித்துப் பார்க்கவே என்னுல் முடிவதில்லை. அவள் கதவைத் தட்டி, உள்ளே வந்து தனது வறிய உடமைகளைக் கீழே வைக்கும்பொழுது அவர்களின் முகாம் வாழ்க்கையின் வாடைகள், அவர்களின் துயரங்கள், மிக ஆழமாக வேரோடி நிற்கும் அவர்களின் உறுதி, அவர்களின் வறுமை, நம்பிக்கை, எல்லாமே ஓடிவந்து என்னை முழுதாக மூடிக் கொள்கின்றன. மறுபடியும் என்னுள் அந்தக் கசப்புணர்வு மேலெழுகிறது. காலங்காலமாக நான் சுமைக்கும் அந்தக் கசப்புணர்வு வெறுப்பு மேவிடும் வரை என்னை ஆக்கிரமிக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமையும் வழமைபோல் வந்து தன் சிறிய பொதியைக் கீழே வைத்து என்னை நோக்கினுள்.

"மச்சான், உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் சாத் போய் விட்டான்."

"எங்கே?"

"அவர்களிடம்"

"யாரிடம்"

"ஃபெடயினிடம்" (பலஸ்தீனியகெரில்லாக்கள்)

எங்களுக்கிடையில் விழிப்பான ஒரு மௌனம் ஆக்கிரமித்துக் கொண்டது. திடீரென்று அவள் உட்கார்ந்திருந்தது என் பார்வையில் வீழ்ந்தது. வயதேறிப் போய் கடும் உழைப்பினுல் நைந்து போய்விட்ட அவள் தோற்றம் தெரிகிறது. அவள் கைகள் பின்னியபடி மடியில் கிடந்தன. அக்கைகள் காய்ந்து, வயதேறிய அடிமரத்தைப் போன்று கீறல் விழுந்து காணப்பட்டன. அவற்றில் காணப்பட்ட வடுக்களும் சுருக்கங்களும் வருடக்கணக்கான கடின உழைப்பின் சுவடுகள். அச்சுவடுகளினூடாக அவள் தனது மகன் சாத்துடன் மேற்கொண்ட அவலமான அப்பயணம் தெரிந்தது---அவனது சிறுபிராயத்திலிருந்து மனிதனுக முதிர்ச்சியடையும் வரையிலான பயணம். அந்த வலுவான கரங்கள், பூமி ஒரு சின்ன மரக்கன்றுக்கு ஊட்டமளிப்பதுபோல அவனையும் வளர்த்து விட்டிருந்தன. இருபது வருடங்களாக அக்கரங்களினுள் அணைவாக இருந்த பறவை திடீரென்று கரங்கள் திறந்ததும் பறந்தோடி விட்டது.

'அவன் ஃபெடயினைச் சேர்ந்து விட்டான்'

நான் தொடர்ந்தும் அவள் கைகளை உற்று நோக்கினேன். ஏமாற்றமடைந்த இரு ஜடங்கள் தம் இதயத்தின் அடி ஆழத்திலிருந்து மேலே நோக்கிய வண்ணம் கதறிக் கொண்டிருந்தது போல் அவள் கூப்பிய கரங்கள் காட்சியளித்தன. முன்பின் தெரியாத ஒருவலில் ஆபத்தை நோக்கி விரையும் அம்மனிதனை இவை தூரத்திச் செல்வது போன்றதொரு உணர்வு. ஐயோ, கடவுளே, ஏன்தான் தாய்மார்கள் தங்கள் புதல்வரை இழந்து போக வேண்டும்? முதன் முறையாக மனதை உலுக்கும் இத்தகைய நிகழ்வை இவ்வளவு நெருங்கிய தூரத்தில் காண்கிறேன். ஏதோ கிரேக்க துன்பியல் அரங்கில் சொல்லி மாளாத துயரம் நிரம்பிய காட்சியொன்றை வாழ்ந்து கொண்டிருப்பது போல இருந்தது. எங்களிருவரினதும் கவனத்தைத் திருப்ப எண்ணி அவளிடம் நான் கேட்கிறேன்.

'அவன் உன்னிடம் என்ன சொன்னுன்?'

'அவன் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. திடீரென்று போய் விட்டான். அவன் அவர்களோடு போய் சேர்ந்து விட்டானென்று காலையில் அவன் நண்பன் எனக்குச் சொன்னுன்'

'தான் இப்படிப் போவானென்று இதற்குமுன் உங்களிடம் அவன் சொல்லவில்லையா?'

'ஆமாம். நிச்சயமாக, நானும் அவனை நம்பினேன். எனக்கு சாத்தை தெரியும். அவன் போவானென்பதும் எனக்குத் தெரியும்.'

'அப்படியானுல் நீ ஏன் அதிர்ச்சியடைந்தாய்?'

நான் அதிர்ச்சியடைந்தேனு? அப்படியொன்றுமில்லை. நான் அவன் போனதைப்பற்றி உனக்கு சும்மா சொல்லி வைக்கிறேன். எனக்குள்ளேயே நான் சொல்லிக் கொண்டேன்: "சாத் என்ன ஆளுன் என்று நீ தெரிந்து கொள்ள விரும்புவாய்."

பின்னிய கைகள் அவள் மடியில் அசைந்தன. அழகான வலுவான அக்கரங்கள், எந்நேரமும் எதையாவது செய்துகொண்டிருக்கும் ஆற்றலுள்ள அக்கரங்கள் என் பார்வையில் பட்டன. அவை உண்மையில் நொந்து போய்த்தான் இருக்கின்றனவா என்று எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவள் தொடர்ந்தாள்:

'இல்லை, இன்று காலை நான் எனது அடுத்த வீட்டுக்காரருக்குச் சொன்னேன்: 'இவனைப்போல எனக்குப் பத்துப் பிள்ளைகள் இருந்தாலோ என்றுடைச்சான், நான் மிகவும் களைத்துப் போய்விட்டேன். இந்த முகாமில் என் வாழ்க்கையே நாராகப் போய்விட்டது. ஒவ்வொரு நாள் காலையும் "ஐயோ கடவுளே" என்று கூவி அழைக்கிறேன். இப்படியே இருபது வருடங்கள் கழிந்து விட்டன..... இந்த நிலைமையில் சாத் போகாவிடில் யார்தான் போவார்கள்?'

அவள் எழும்பு நின்ருள். அந்நேரம் எல்லாமே எளிமையாகிவிட்டது போன்றதொரு சூழல் வந்து அந்த அறைக்குள் புகுந்து கொண்டது. எல்லாமே பழக்கப்பட்டதைப் போன்று வழமையானதாகத் தென்பட்டது. அக்கணத்தில் அல்-கபாசியாவின் அந்த வீடுகள் என் கண்களில் நிழலாடியது. அவளை நான் சமையலறைக்குள் பின் தொடர்ந்தேன். அங்கு அவள் என்னைப் பார்த்துச் சிரித்த வண்ணம் சொன்னுள்:

"பஸ்ஸில் எனக்கருகில் இருந்த பெண்ணிடம் எனது மகன் ஒரு போராளி ஆகிவிட்டான் என்று சொன்னேன்...... அவனை நான் எவ்வளவு நேசிக்கிறேன் என்றும் அவனில்லாமல் எனக்கு என்னவோ போலிருக்கிறது என்றும் சொன்னேன். ஆனுல் அவன் எப்போதும் அவனுடைய அம்மாவின் பிள்ளைதான். அவனுக்கு அவர்கள் இயந்திரத் துப்பாக்கி கொடுப்பார்கள் என்று நினைக்கிருயா?"

'அவர்கள் தங்கள் ஆட்களுக்கு எப்போதும் இயந்திரத் துப்பாக்கிகள்தான் கொடுப்பார்கள்'

'சாப்பாடு என்ன மாதிரி?'

'அவர்களுக்கு போதியளவு உணவு கொடுப்பார்கள். சிகரெட்டும் கொடுப்பார்கள்'

'சாத் சிகரெட் பிடிப்பதில்லை. ஆனுல் அங்கு நிச்சயம் பழகி விடுவான். அவன் அம்மாவின் கண்மணி. அவனிருக்குமிடம் எனக்கு கிட்ட இருந்தால் எவ்வளவு நல்லது. நானே சமைத்த உணவை ஒவ்வொரு நாளும் அவனுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கலாமில்லையா?'

'அவனுக்கும் அவன் தோழர்களைப் போல் சாப்பாடு கிடைக்கும்.'

'கடவுளே அவர்கள் எல்லோரையும் ஆசீர்வதியும்' சில கணங்களுக்கு மௌனமானுள். பின் என்னை நோக்கித் திரும்பினுள்.

நான் அவனைப் பார்க்கச் சென்ருல் அவன் சந்தோசப்படுவானு? பிரயாணத்துக்கான பணத்தை என்னுல் சேமித்துக் கொள்ள முடியும். இரண்டு நாட்களில் அங்கு போய்விடலாம். எதையோ நினைத்தவள் போல் முடித்துக் கொண்டாள். என்ன தெரியுமா? பிள்ளைகள் இருந்தால் அடிமைத்தனம்தான். இந்த இரண்டு பிள்ளைகளும் இல்லாவிட்டால் நான் அவன் பின்னே போயிருப்பேன். அவனுடன் அங்கு வாழ்க்கை நடத்தியிருப்பேன். ஆமாம் அகதிகள் முகாமின் கூடாரத்திலிருந்து கெரில்லாத்தனம் பெறுபட்டதுதான். அவர்களுடன் வாழ்ந்து அவர்களுக்கு சமையல் செய்து கொடுத்து அவர்களுக்கு வேண்டியதெல்லாம் செய்து கொடுத்திருப்பேன். ஆமாம். பிள்ளைகள் இருந்தால் அடிமைத்தனம்தான்.'

நான் பதிலளித்தேன்:

'அவனை அங்கு போய்ப் பார்க்க வேண்டிய தேவை எதுவுமில்லை. அவன் தனியாக சமாளித்துக் கொள்ளட்டும். ஃபெடயினில் சேர்ந்து கொள்கிற ஒருவனை அவனுடைய அம்மா பார்த்துக் கொள்ளத் தேவையில்லை".

அவள் தன் மேல் பாவாடையில் கைகளைத் துடைத்துக் கொண்டாள். அவள் கண்களின் அடி ஆழத்தில் ஏமாற்றம் தெரிந்தது. பாவனை முடிந்தபின் பயனற்றது என ஒரு மூலையில் தூக்கி வெறியப்படும் ஒரு பொருளாக தாய் உணர்கிருள். அக்கணம் பயங்கரமானதுதான். அவள் என்னை நெருங்கியபடியே வினவினுள்.

'உண்மையில் அப்படி நினைக்கிருயா? அப்படியானுல் அங்குள்ள கமாண்டரிடம் நான் போய் அவனை நன்கு கவனித்துக் கொள்ளச் சொல்வதில் பயனில்லையா?' அவள் மனம் முரண்பட்ட நிலையில் தவித்தது. ஒருவித தயக்கத்துடன் கேட்டாள்:

இல்லாவிடில் அவனுடைய கமாண்டரிடம் நீ போய் அவனைக் கவனித்துக் கொள்ளும்படி கேட்கலாமா? அவனிடம் நீ சொல்லலாம்: "சாத்தைக் கவனித்துக் கொள். ஆண்டவன் உன் பிள்ளைகளுக்கு நீண்ட ஆயுளை அருள்வாராக."

'எப்படி' நான் பதிலளித்தேன். 'ஒரு கெரில்லாவைக் கவனித்துப் பார்த்துக் கொள்ளும்படி யாருக்கும் நாம் போய் சொல்ல முடியாது"

'ஏன்?'

'எந்தவொரு ஆபத்தான நிலைமையிலும் அவன் சிக்கிவிடாமலிருக்கும்படி அவனுக்கு வசதி செய்து தரும்படி கமாண்டரைக் கேட்டதாகவல்லவோ இருக்கும். ஆனுல் சாத்தும் அவன் தோழர்களுமே தங்களைப் போருக்கு உடனடியாக அனுப்புவதையே தம்மை நன்கு கவனிப்பதாக கருதுகிருர்கள்.

மீண்டும் அவள் அவ்விடத்தில் வந்து அமர்ந்தாள். ஆனுல் முன்னெப்பொழுதையும்விட தைரியம் கொண்டு காணப்பட்டாள். அவள் கண்களிலும் கடினமான கைகளிலும் ஒரு தாயின் தடுமாற்றத்தையும் வேதனையையும் காண்கிறேன். கடைசியில் ஒருவாறு தன் மனதில் ஒரு முடிவெடுத்துக் கொள்கிருள்.

'நான் உனக்கொரு விஷயம் சொல்லுகிறேன், என்ன? அவன் கமாண்டரிடம் அவனைக் கவனிக்கச் சொல்லிக் கூறும்பொழுது --அவனுக்கு எரிச்சலூட்டும்படியாக எதனையும் செய்ய வேண்டாமென்று கமாண்டருக்கு ஆலோசனை கூறிவிடு. அந்தக் கமாண்டரிடம் "சாத்தின் உம்மா உங்கள் தாயின் பேரில் கெஞ்சிக் கேட்கிருள் சாத் என்ன செய்ய விரும்புகிருனே அதைச் செய்ய விட்டு விடுங்கள். அவன் ஒரு நல்ல பையன். ஆனுல் அவன் எதையாவது செய்ய விரும்பி அது அப்படி நடக்காவிட்டால் அவன் மிகவும் அன்புறுவான்" என்று சொல்லிவிடு. சாத் விரும்புவதை செய்ய விட்டுவிடுங்கள் என்று நான் இறைஞ்சிக் கேட்டதாக அவரிடம் சொல். அவன் போருக்குப் போக விரும்பினுல் அவனுடைய கமாண்டர் அவனை ஏன் அனுப்பக்கூடாது?



கஸானின் பிரசித்தி பெற்ற நாவலான 'சாத்தின் உம்மா' விலிருந்து ஒரு பகுதி

# கொரில்லா யுத்தம்

## பற்றிய குறிப்புகள்

ஒரு அரசியற்போராட்டத்தின் அதி உச்சக் கட்டமாக, அப்போராட்டத்தின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்த நிலையில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் தோற்றம் கொள்கிறது. இது உலகளாவியவரலாற்றுஉண்மை. உலக சோசலிசப் புரட்சிகளும், தேசிய விடுதலைப் போராட்டங்களும் ஆயுதம் தரித்த புரட்சிகரப் போராட்டப் பரிணமம் பெற்றவையே.

ஒடுக்கு முறையாளன் தனது அடக்குமுறைச் சாதனமாக ஆயுத பலாத்காரத்தையே பிரயோகிக்கிறான். இந்த அநீதியான ஆயுத பலாத்கார அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழும் மக்கள் ஆரம்பத்தில் அமைதிவழிப் போராட்டங்களை நடத்துகின்றனர். ஆனால் இந்த அமைதி வழி மென்முறைப் போராட்டங்களை நசுக்க ஒடுக்குமுறையாளன் ஆயுத வன்முறையை அதிதீவிரப்படுத்துகிறான். இதனால் சட்ட ரீதியான, சமாதான, சனநாயக போராட்ட முறைகளில் மக்கள் நம்பிக்கை இழக்கின்றனர். அதே சமயம் ஒடுக்குமுறையோ நீடிக்கிறது; சாதாரண வாழ்க்கையின் சகல பரிமாணங்களிலும் ஊடுருவிச் செல்கிறது. மனித உரிமைகள் இழந்த அடிமைத்தனத்திற்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். அடக்குமுறையின் அழுத்தம் அதிகரிக்க மக்களிடம ஆவேசம் பிறக்கிறது. விடுதலை வேட்கை எழுகிறது. ஆயுதப்பலாத்கார அடக்குமுறையை ஆயுதம் தாங்கி எதிர்கொள்ள மக்கள் தயாராகின்றனர். இந்தப் புரட்சிகர வரலாற்று சூழ்நிலையிலேயே ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கம் (armed resistance movement) ஒரு வெகுசன போராட்ட வடிவத்தை எடுக்கிறது. எனவே, அடக்குமுறைக்கு எதிராகச் சகலவிதமான சமாதான வழி தழுவிய போர்முறைகளையும கையாண்டு தோல்விகண்ட மக்கள், வேறெந்த வழியுமற்ற சூழ்நிலையில், ஆயுதம் தாங்கிய புரட்சிகரப் போராட்டத்தில் குதிப்பது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகிவிடுகிறது. தமிழீழத் தேசிய சுதந்திரப் போராட்ட வரலாற்றை எடுத்துக் கொண்டால் இந்த உண்மை நன்கு புலனாகும்.

எமது போராட்டம் 35 வருட கால வரலாற்றைக் கொண்டது. இந்த வரலாற்றுக் காலத்தில் எமது விடுதலைப் போராட்டம் பல திருப்புமுனைகளை அடைந்திருக்கிறது; புதிய வடிவங்களைப் பெற்றிருக்கிறது; புதிய பரிமாணங்களை உள்ளடக்கியதாக விரிவுபெற்றிருக்கிறது. சம உரிமை கோரி, மொழியுரிமை கோரி, சமஷ்டி ஆட்சி கோரி, ஈற்றில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியாட்சிகோரும் அளவிற்கு எமது போராட்டம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டது. ஆரம்பத்திலிருந்து கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக நாம் அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில் அமைதி வழிப் போராட்டங்களை நடத்தினோம். வர்க்க, சாதி வேறுபாடற்ற ரீதியில் முழுத் தமிழீழ சமூகமுமே இந்த தேசியப் போராட்டத்தில் எழுச்சி கொண்டது. சகலவிதமான சமாதான, சனநாயக மார்க்கங்களிலும் மக்கள் தமது விடுதலையுணர்வுக்கு வெளிப்பாடு கண்டனர். தமிழ்த் தேசாபிமான எழுச்சியைக் கண்டு மிரண்ட சிங்கள இனவாத அரசு தனது பாசிச அடக்குமுறை இயந்திரத்தை முடுக்கிவிட்டது. அகிம்சை வழி மென்முறைக்கு எதிராக ஆயுத வன்முறை விஸ்வரூபம் எடுத்தது அடக்கு முறையாளனின் ஆயுத பலத்திற்கு அகிம்சைப் போரின் தார்மீக பலத்தால் ஈடுகொடுக்க முடியவில்லை. தமிழீழச் சுதந்திரப் போராட்ட வரலாற்றின் ஒரு சகாப்தம் முடிவுற்றது. அகிம்சைப் போராட்டத்திலும் அப்போராட்ட யுக்தியைக் கையாண்ட தலைமையிலும் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கையை இழந்தனர். எழுபதின் ஆரம்பத்தில் ஒரு புதிய யுகம் பிறக்கிறது. இது புதிய பரம்பரையின் புரட்சிகரமான சகாப்தம். புரட்சிகர ஆயுத வன்முறைப் போராட்டம் வரலாற்று ரீதியாக பிறப்பெடுத்த காலகட்டம்.


சட்ட ரீதியான, சனநாயக போராட்ட வடிவங்கள் படுதோல்விகண்ட சூழ்நிலையில், இன அழிப்பு அட்டூழியங்களிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்க வேறெந்த வழியுமற்ற சூழ்நிலையில் தான் புரட்சிகர ஆயுத எதிர்ப்பு இயக்கம் தமிழீழத்தில் தலைதூக்கியது. இந்த ஆயுதப் புரட்சி இயக்கத்திற்கு அன்று முன்னோடியாக விளங்கியதும், இன்று முன்னணி வகித்துவருவதும் விடுதலைப் புலி இயக்கம் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. ஆயுதப் போராட்டத்தை ஒரு புரட்சிகர இலட்சியத்தின் அடிப்படையில் வரித்து ஒரு கட்டுப்பாடான இரகசிய இயக்க அமைப்பை உருவாக்கி, கொரில்லாப் போர் முறையை மக்கள்போராட்ட வடிவமாக தமிழீழத்தில் அறிமுகம் செய்த பெருமை எமது இயக்கத் தலைவரான பிரபாகரனையே சாரும். இவர் கட்டி வளர்த்த புலி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை ஒரு புரட்சிகரமான புதிய சகாப்தத்தில் பிரவேசிக்கச் செய்தது. திசை தெரியாது தடுமாறிய தமிழரின் அரசியல் போராட்டம் ஆயுதப் போர் வடிவ பரிணமம்பெற்று ஒரு உயர்ந்த நிலைக்கு முன்னேற்றம் கண்டது.

உலகெங்கும் கொரில்லாப் போர்முறையானது ஒரு விடுதலைப்போராட்ட வடிவமாக வலுப்பெற்று வருகிறது. இரண்டாவது உலக யுத்தத்தை அடுத்து இன்று வரை, கிட்டத்தட்ட 50நாடுகளில் கொரில்லாப் பாணியிலான ஆயுதப் புரட்சிப் போராட்டங்கள் தலைதூக்கியிருக்கிறது. காலனிய, ஏகாதிபத்திய சக்திகளின் அடக்குமுறையை உடைத்தெறிய கொரில்லாப் போர்முறையைக் கையாண்டு எத்தனையோ நாடுகள் விரசுதந்திரம் பெற்றுள்ளன. சீனு, வியட்னும், கியூபா, அல்ஜீரியா, அங்கோலா, மொசாம்பீக்கினி, சிம்பாவே, நிகராக்குவா போன்ற நாடுகள் கொரில்லாப் போர்முறைத் திட்டத்தைக் கையாண்டே வெற்றிகள் ஈட்டின இன்னும் எத்தனையோ நாடுகளில் கொரில்லாப் போர்முறை தழுவிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றிப் பாதையில் வீறுநடை போடுகின்றன. புரட்சிகர ஆயுதப் போராட்ட யுக்திகளில் கொரில்லாப் போர்முறையானது ஒரு தலைசிறந்த போர்க்கலை. ஒரு பலம் வாய்ந்த அடக்குமுறை அமைப்புக்கு எதிராக, பலம் குன்றிய மக்களால் தொடுக்கப்படும் மிகச் சக்தி வாய்ந்த போராயுதம். எத்தவொரு பிரமாண்டமான இராணுவ இயந்திரத்தையும் நிலைகுலைந்து நடுங்கவைக்கும் போர்த்தந்திரோபாயம், இந்தக் கொரில்லாப் போர் முறையானது உலகளாவிய ரீதியில் ஒடுக்கப்படும் மக்களினத்தில் பிரபல்யம் பெற்றிருப்பினும் இப்போர் முறையை அதன் இட்ப நுட்பங்களுடன் தமிழீழ அரசியல் போர் அரங்கில் அறிமுகம் செய்து, அதனை முன்னெடுத்துச் செல்வது எமது விடுதலை இயக்கமாகும்.

கொரில்லாப் போராட்டம் பற்றியோ அல்லது உலக விடுதலை இயக்கங்களின் போர் முறைகள் பற்றியோ எவ்விதமான விளக்கத் தெளிவற்ற அரசியல் வாதிகளும், பழைய மரபு மார்க்சியவாதிகளும் ரொட்சியவாதிகளும் எமது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை 'தனிநபர் பயங்கரவாதம்' என்னும் கோட்பாட்டில் இன்னும் விமர்சித்து வருகிறார்கள். **கொரில்லாப் போர் முறையைக் கண்டிக்கும் வேறுசிலர் தாம் மக்கள் போராட்டம் நடத்தப் போவதாகப் பிதற்றி வருகிறார்கள். இவர்கள் எல்லோரினதும் குழப்பத்திற்கு பிரதான காரணம் கொரில்லாப் போராட்டம் பற்றிய விளக்கக் குறைவாகும்.** இவர்கள் இன்னும் பழைய மரபு மார்க்சியக் கோட்பாடுகளில் சிறையுண்டு கிடப்பதால் நவயுகப் புரட்சிப் போராட்ட வரலாறுகளையும், அப் போராட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய மார்க்சிய புரட்சிச் சிந்தனைகளையும் கிரகித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு தேசிய விடுதலைப் போராட்டமும் தனக்கே உரித்தான வரலாற்று வளர்ச்சியையும், தனித்துவமான 'எதார்த்த சூழ்நிலைகளையும், இவற்றை எல்லாம் அனுசரித்து வரிக்கப்பட்ட போராட்ட வடிவத்தினையும் கொண்டிருக்கிறது. எமது விடுதலைப் போராட்டமும் அதற்குரிய தனித்துவமான புறநிலைகளையும் வரலாற்றினையும் கொண்டது. இந்த சூழ்நிலைகளின் நிதர்சனத்திற்கு ஏற்பவே எமது போராட்ட வடிவமும் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. எமது பூகோள சூழ்நிலைகள், எமது எதிரியின் நிலைப்பாடு, சதா புதியதிருப்பங்களை அடைந்து வரும் அரசியல் சூழ்நிலை, இவற்றையெல்லாம் ஆய்வு செய்தே எமது போர்முறை முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இதன் காரணமாகவே எமது ஆயுதப் போராட்டமானது வெற்றிப் பாதையில் விரிவடைந்து முன்னேறியிருக்கிறது. இதன் காரணமாகவே மக்கள் எமக்குப் பக்கபலமாக நிற்கிறார்கள். மக்களின் ஆதரவின்றி மக்களின் நேரடிப் பங்களிப்பின்றி ஆயுதப் போராட்டம் நிலைத்து நிற்காது என்பது எமக்கு நன்கு தெரியும். கொரில்லாப்போர் என்பதே ஒரு வெகுசனப் போராட்டம். தேசிய விடுதலைப் பரிணமம் பெற்ற எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களை அணிதிரட்டி ஒரு வெகுசன ஆயுதப் புரட்சிப் போர்மூலம் விடுதலையை வென்றெடுப்பதே எமது அரசியல்-இராணுவத் திட்டமாகும்.

புரட்சிகர ஆயுதப் போரின் ஒரு வடிவமான கொரில்லாப் போராட்டம்பற்றி சோசலிசத் தத்துவார்த்த விளக்கங்களைக் கொண்ட படைப்புகள் நிறையவுண்டு. கொரில்லாப் போரின் தன்மை, போர் முறைத் திட்டம், போராட்ட யுக்திகள், பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் மத்தியில் நிலவவேண்டிய உறவுகள், இராணுவப் போரின் அரசியல் முக்கியத்துவம் ஆகியனபற்றி புரட்சித் தலைவர்கள் தமது போராட்ட அனுபவங்களின் அடிப்படையில் ஆழமான கருத்துகளை முன்வைத்திருக்கிறார்கள். இக் கருத்துக்களும் கோட்பாடுகளும் அந்தந்த நாடுகளின் வரலாற்று சூழ்நிலைக்கு பொருத்துவன. ஆயினும் உலகப் புரட்சி அனுபவங்களைப் படித்தறிவதன் மூலம் தமிழீழப் போராளிகளின் பார்வைகள் கூர்மையடையும்





போர்ப் பயிற்சியில் புலிகள்


# சர்வதேச நெருக்கடியாகு

''பயங்கரவாதிகளை அழிப்பதற்கு எந்தப் பேய், பிசாசுகளின் உதவியைப் பெறுவதற்கும் நாம் தயார்'' என்று ஜெயவர்த்தனா அண்மையில் அறிவித்திருந்தார். இந்தக் கூற்றை மெய்ப்பிப்பதுபோல் முழு உலகமே வெறுக்கும் சாத்தானுகிய இஸ்ரேலிய உளவுப் படையின் (மொசாட்) உதவியை நாடியிருக்கிறது இலங்கை அரசு. தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை நியாயபூர்வமான முறையில் தீர்வு காண்பதற்கு எவ்வித அக்கறையும் காட்டாத ஜெயவர்த்தனா அரசு, இராணுவ அடக்குமுறைப் பாதையை மேலும் வலுப்படுத்த சர்வதேச நாசகார சக்திகளை உதவிக்கு அழைத்திருக்கிறது. இதன் காரணமாக, இனவாதத்தின் அடிப்படையில் எழுந்த ஒரு தேசிய இனப் பிரச்னை உலக ஏகாதிபத்திய தலையீடுகளைக் கொண்ட சர்வதேச நெருக்கடியாக மாறிவருகிறது.

இஸ்ரேலிய அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒரு ஏவல் நாய். இஸ்ரேலை ஒரு வலிமை வாய்ந்த இராணுவ இயந்திரமாக மாற்றி, அதன் மூலமாக அமெரிக்கா தனது ஆதிபத்தியத்தை மத்திய கிழக்குப் பிரதேசத்தில் நிலைநாட்டி வருகிறது. இஸ்ரேலிய-அமெரிக்க கூட்டு ஏகாதிபத்தியம் இன்று லத்தீன் அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் விரிவு படுத்தப்பட்டிருக்கிறது. இப்பிரதேசங்களில் தலைதூக்கியிருக்கும் விடுதலைப் போராட்ட எழுச்சிகளை நசுக்குவதில் இவ்விரு நாடுகளும் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. ஒடுக்கப்படும் மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டங்களை 'சர்வதேச பயங்கரவாதம்' என வர்ணித்து அவற்றை முறியடிக்கும் நாசகார வேலைகளில் யு. எஸ் - யூத ஏகாதிபத்தியம் கூட்டாகச் செயல்பட்டு வருகிறது. இன்று இந்த நாசகார ஏகாதிபத்திய சக்திகளின் கவனம் தென் ஆசிய பிராந்தியத்திற்கு திருப்பப்பட்டிருக்கிறது. இந்து மா சமுத்திரத்தில் இலங்கைத் தீவின் பூகோள கேந்திர முக்கியத்துவத்தை உலக ஏகாதிபத்தியம் நன்கு அறியும். இலங்கையில் நங்கூரமிட்டு அதனைத் தளப் பிரதேசமாகப் பாவித்து இந்திய உபகண்டத்தில் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கமாகும். அமெரிக்காவின் இத்திட்டத்தின் முதல் கட்டமாகவே இஸ்ரேலிய உளவு ஸ்தாபனம் இலங்கைக்குள் புகுந்திருக்கிறது.

அமெரிக்க உளவு ஸ்தாபனமாகிய C.I.A.யின் ஒரு முக்கிய அங்கமாகவே இஸ்ரேலிய உளவுப் படையாகிய மொசாட் இயங்கி வருகிறது. உலகத்தின் பல பகுதிகளில் இவ்விரு ஸ்தாபனங்களும் கூட்டாகச் சேர்ந்தே நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஆகவே இஸ்ரேலியர்களின் வருகை C.I.A.யின் சாமர்த்தியமான ஊடுருவல் என்றே சொல்ல வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியமானது வேறு பல வழிகளிலும் இலங்கையில் தனது ஆதிபத்தியத்தை படிப்படியாக வலுப்படுத்தி வருகிறது. திருகோணமலை எண்ணெய்க் குதங்களை தம் வசமாக்கிக் கொண்டமை, சக்தி வாய்ந்த தகவல் பரிவர்த்தனை நிலையங்களை அமைத்து வருவது, இலங்கைக் கரையோரங்களில் 'கடல் ஆராய்ச்சி' என்ற போர்வையில் உளவுக் கப்பல்களை ரோந்திற்கு விட ஒப்பந்தம் செய்துகொண்டமை---இப்படியாக அமெரிக்கா தனது ஏகாதிபத்திய சிலந்தி வலைக்குள் சிறிலங்காவை சிக்குப் படச் செய்து வருகிறது. ஆட்டம் கண்டுள்ள ஜெயவர்த்தனாவின் அரசுக்கு முண்டுகொடுத்து, அதனை தனது அடிவருடி நாடாக மாற்றி, இந்து சமுத்திரப் பிரதேசத்தில் தனது கடலாதிக்கத்தை விரிவுபடுத்தி இந்தியாவை சுற்றி வளைப்பதுதான் அமெரிக்காவின் சதித் திட்டம். இந்த நாசகாரத் திட்டத்தை நிறைவேற்ற இஸ்ரேலியர்களை மட்டுமன்றி சீனாவையும் கூட்டுச் சேர்ந்திருக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

மாவோவின் மரணத்தை அடுத்து பதவிக்கு வந்த புதிய சீனத் தலைமை அமெரிக்காவின் நண்பனாக மாறிவருவது யாவரும் அறிந்ததே. சீனாவை 'நவீன மயமாக்கும் திட்டம்' என்ற போர்வையில் உலக முதலாளித்துவ ஊடுருவல்களுக்கு இடமளித்து, அமெரிக்க ஏகாதிபத்திய விரிவாக்கத்திற்கு உடந்தையாக இருந்து வருகிறது இன்றைய சீனாவின் பிற்போக்குத் தலைமை. ஆகவே ரஷ்ய எதிர்ப்பு அணியில் சேர்ந்து, இந்தியாவை சுற்றி வளைக்கும் திட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சீனா ஒத்துழைத்து வருகிறது. இந்த அமெரிக்க--இஸ்ரேலிய--- சீனக் கூட்டணியுடன் ஜெயவர்த்தனா அரசும் சேர்ந்திருக்கிறது. ஜெயவர்த்தனா சீனாவுக்கு விஜயம் செய்



ததும், அதனைப்படுத்து சீன விமானப்படைத் தளபதி சமீபத்தில் இலங்கை விஜயம் செய்திருப்பதும், சிறிலங்கா விமானப் படையை நவீன மயமாக்குவது டன் நவீன ரோந்துப் படகுகளையும் வழங்கிட சீனர்கள் இணங்கியிருப்பதும் இதற்கு சான்று பகர்கிறது. இவ்விதம் ஏகாதிபத்திய வல்லரசுகளின் வலைவிரிப்பிற்குள் ஜெயவர்த்தனா சிக்குப்பட்டிருப்பது ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமன்றி இந்திய தேசிய பாதுகாப்பிற்குமே பெரும் ஆபத்தாக விளையும்.

### உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கடும் எதிர்ப்பு

'பயங்கரவாத ஒழிப்பு' என்ற போர்வையில் ஈழத் தமிழ் பேசும் மக்களை இன ரீதியாக ஒழித்துக் கட்டுவதே சிங்கள இனவாத அரசின் நோக்கம். இந்த இனக் கொலைத் திட்டத்தை மிகவும் சாதுரியமாக செயற்படுத்தும் நோக்கிலேயே இஸ்ரேலிய மொசாட் நிபுணர்களை அழைத்திருக்கிறார் ஜெயவர்த்தனா. பாலஸ்தீன மக்களை அவர்களது பாரம்பரிய பூமியிலிருந்து விரட்டியடித்து, அவர்களை நாடற்றவர்களாக சிதறடித்து, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை சிதைத்து, விடுதலைப் போராளிகளை மோதவிட்டு, பாலஸ்தீன சுதந்திரப் போரை பல்லாண்டுகளுக்கு ஒத்திப் போட்ட சாதனையைப் புரிந்தவர்கள் மொசாட் உளவுப் படையினர். இந்த சூத்திரதாரக் கைங்கரியத்தையே இஸ்ரேலியர்கள் மூலம் தமிழர்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்த விரும்புகிறது ஜெயவர்த்தனா அரசு. ஆகவே, ஈழத் தமிழினம் ஒரு பெரிய ஆபத்தை எதிர்நோக்கி இருக்கிறது என்றே சொல்ல வேண்டும். இதனால் நாம் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

தமிழீழத்தில் இராணுவ ஆட்சியைப் பலப்படுத்தி, தமிழரின் தேசிய சுதந்திரப் போராட்டத்தை முற்றாக நசுக்கி, தமிழினத்தின் தேசிய தனித்துவத்தை சிதறடிக்கும் நாசகாரத் திட்டத்திற்கும் முதற்படியாக ஈழ விடுதலைப் போராளிகளை மக்களிடமிருந்து அந்நியப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது திண்ணம். விடுதலை இயக்கங்கள் மக்கள் விரோத சக்திகள் என்ற ரீதியில் மக்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும் பிரச்சாரங்கள் செய்யப்படலாம். சிங்கள இராணுவமே மக்கள் விரோத செயல்களைப் புரிந்து விட்டு அந்தப் பழியை விடுதலை அமைப்புகள் மீது சுமத்தி விடலாம். விடுதலை இயக்கங்கள் மத்தியிலே ஒற்றுமை இல்லை என்றும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்கின்றன என்றும் விஷமப் பிரச்சாரங்கள் திட்டமிட்டுச் செய்யப்படலாம். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தேசியப் பத்திரிகைகள் இதற்குப் பயன்படுத்தப்படலாம். உதாரணமாக, பிரபாகரனும் உமாவும் சமீபத்தில் சென்னையில் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டு தமிழ்நாட்டு பொலிஸாரால் தேடப்படுகிறார்கள் என்ற அபாண்டமான பொய்யை கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது சிறிலங்கா அரசு. இவ்விதம் மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணி, விடுதலை இயக்கங்கள்மீது மக்களுக்கு நம்பிக்கையீனத்தையும் வெறுப்புணர்ச்சியையும் விதைத்துவிட சகலவிதமான சதி முயற்சிகளையும் சிங்கள அரசு மேற்கொள்ளும். ஆகவே விடுதலைப் போராளிகள் சம்பந்தமாக அரச பத்திரிகைகளிலும் வானொலியிலும் வெளிவரும் செய்திகளை நம்பி தமிழ் மக்கள் குழப்பமடையக் கூடாது. விடுதலைப் புலிகளுக்கு வெகுசன ஆதரவு இருக்கும்வரை விடுதலை இயக்கத்தை நசுக்க முடியாது என்பதை சிங்கள இனவாத அரசு நன்கறியும். விடுதலை வீரர்களை வெகுசனத்திலிருந்து அந்நியமாக்கி, மக்கள் ஆதரவைத் துண்டித்து, மக்களைச் சுட்டிக் காட்டிக்கொடுக்க வேண்டும் என்பதே எதிரியின் பிரதான நோக்கமாகும். ஆகவே, மக்கள் இவ்விஷயத்தில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

அடுத்ததாக, விடுதலை இயக்கங்களுக்குள் அமெரிக்க-இஸ்ரேலிய சார்பு ஏஜண்டுகளின் ஊடுருவல்கள் தீவிரமாக்கப்படலாம். அமெரிக்க சார்பான, C.I.A. உளவு ஸ்தாபனத்துடன் தொடர்புடைய தமிழ் அரசியல்வாதிகள்




## ஸ்ரீ லங்கா பத்திரிகைகளின் பார்வையில் புலிகள்









நன்றி : ஐலண்ட், சன்










# ராதும் ஈழத்தமிழர் பிரச்சனை






விடுதலைப் போராளிகள் சம்பந்தமாக அரச பத்திரிகைகளிலும் வானொலியிலும் வெளிவரும் செய்திகளை நம்பி தமிழ் மக்கள் குழப்பமடையக் கூடாது. விடுதலைப் புலிகளுக்கு வெகுஜன ஆதரவு இருக்கும்வரை விடுதலை இயக்கத்தை நசுக்க முடியாது என்பதை சிங்கள இனவாத அரசு நன்கறியும். விடுதலை வீரர்களை வெகுஜனத்திலிருந்து அந்நியமாக்கி, மக்கள் ஆதரவை துண்டித்து, மக்களாகவே அவர்களைக் காட்டிக்கொடுக்க வேண்டுமென்பதே எதிரியின் பிரதான நோக்கமாகும். ஆகவே, மக்கள் இவ்விசயத்தில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.


அடுத்ததாக, விடுதலை இயக்கங்களுக்குள் அமெரிக்க-இஸ்ரேல் சார்பு ஏஜண்டுகளின் ஊடுருவல்கள் தீவிரமாக்கப்படலாம். அமெரிக்க சார்பான, C.I.A. உளவு ஸ்தாபனத்துடன் தொடர்புடைய தமிழ் அரசியல்வாதிகள், பிரமுகர்கள் இருந்து வருவதும் யாவருக்கும் தெரிந்த விசயமே. அரசியல் யாப்பு நிபுணர்களாக (constitutional experts), சட்ட ஆலோசகர்களாக, ஜெயவர்த்தனாவின் நண்பர்களாக இயங்கும் இவர்கள் விடுதலை அமைப்புகளை ஊடுருவல் செய்து எதிரிக்கு தகவல்களைக் கொடுக்கலாம். விடுதலை இயக்கங்களை ஒன்றுக்கொன்று முடித்துவிடவும் முயற்சிக்கலாம். இப்பேர்ப்பட்ட அமெரிக்க சார்பு, முதலாளித்துவ, இனத்துரோக சக்திகளின் செயற்பாடுகள் பற்றி விடுதலை அமைப்புகள் விழிப்பாக இருக்க வேண்டும்.

### பாரத நாடு அசட்டை செய்ய முடியாது

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்கில் இஸ்ரேலியர்களுடன் ராஜதந்திர உறவைப் புதுப்பித்துக் கொண்டு மொசாட் உளவுப் படையை உதவிக்கு அழைத்த இலங்கை அரசின் நடவடிக்கை ஜெயவர்த்தனா எதிர்பார்த்ததற்கு மாறாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெரும் எதிர்ப்பைக் கிளப்பி விட்டிருக்கிறது.

இஸ்ரேலிய அரசும் அதன் சையோனிச இனவாத சித்தாந்தமும் முஸ்லிம் உலகின் பிரதான எதிரி என்பதால் இஸ்ரேலியரின் வருகை இஸ்லாமியத் தமிழர்கள் மத்தியில் பெரும் ஆவேசத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இஸ்லாமியத் தமிழ் பேசும் மக்கள் தமது எதிர்ப்பை, ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்களாக வெளிக்காட்டியபோது சிங்கள இனவாத அரசு மிகவும் மூர்க்கத்தனமாக அதனை நசுக்க முயன்றது. இதன் விளைவாக பல அப்பாவி மக்கள் உயிரிழக்க நேர்ந்தது. ஜெயவர்த்தனா அரசின் இந்த நடவடிக்கை இஸ்லாமியத் தமிழருக்கு மேலும் கொதிப்புணர்வை ஊட்டியிருக்கிறது. இஸ்ரேலியரின் உதவியுடன் தமிழருக்கு எதிராக விரிவுபடுத்தப்படவிருக்கும் ஒடுக்குமுறையானது இஸ்லாமியத் தமிழ் பேசும் மக்களையும் கடுமையாகப் பாதிக்கப்போகிறது என்பதை அவர்கள் நன்கு உணரத் தொடங்கியுள்ளனர். காலம்காலமாக யு. என். பி. கட்சிக்கு ஆதரவாக இருந்து வந்த இஸ்லாமிய இயக்கங்கள் இப்பொழுது ஜெயவர்த்தனா அரசுக்கெதிராக போர்க்கொடி உயர்த்தி நிற்கின்றன. தேசிய சிறுபான்மை இனங்களை ஒழித்துக்கட்டுவதுதான் சிங்கள இனவாத யு. என். பி. ஆட்சியாளரின் நோக்கம் என்பதை இஸ்லாமியக் உலகம் புரியத் தொடங்கியுள்ளது. ஆகவே, ஈழத் தமிழரின் அங்கமாக அவர்கள் தம்மை இனம்கண்டு தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு முழு ஆதரவு அளிப்பதே தமிழ் பேசும் இனத்தின் விடிவுக்கு வழிவகுக்கும். இஸ்ரேலியருக்கு எதிரான எமது போராட்டத்திற்கு இஸ்லாமியத் தமிழ் மக்களும் எமக்கு கை கொடுக்கவேண்டும் என்பதே எமது அவா.

இஸ்ரேலியரின் ராஜதந்திர உறவை 14 ஆண்டுகளுக்கு முன்னரே முறித்துக்கொண்டு பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்துக் கொண்ட சிறிமாவின் சுதந்திரக் கட்சி ஜெயவர்த்தனா அரசை பலமாகக் கண்டித்திருக்கிறது. இஸ்ரேலியர்களை வரவழைத்து 'அரபு நாடுகளுக்கு முகத்தில் அடித்தது போன்ற செயல்' என சிறிமா குற்றம் சாட்டியிருக்கிறார். சிங்கள இடதுசாரிக் கட்சிகளும் முற்போக்கு இயக்கங்களும் தமது எதிர்ப்பை பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றன. தமிழருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட சிங்களப் பேரினவாதம் நாட்டை குட்டிச் சுவராக்கியதுடன் இறுதியில் உலக ஏகாதிபத்தியத்திற்கு சிங்கள மக்களை நிரந்தர அடிமையாக்கப் போகிறது என்பதை சிங்கள முற்போக்கு சக்திகள் இப்பொழுது உணரத் தொடங்கியுள்ளன. தமிழருக்கு எதிரான, இந்தியாவுக்கு எதி



### அரசின் பொய்ப்பிரசாரம்

ரான, வெறுப்புணர்வால் உந்தப்படும் சிங்கள ஆளும் வர்க்கம் இலங்கையை அமெரிக்காவின் அணுவாயுதத் தளமாக மாற்றி, சர்வதேச யுத்த நெருக்கடியின் களமாக ஆக்கிவரும் போக்கை சிங்கள முற்போக்கு சக்திகள் உணர்ந்து கொள்ள வேண்டும். இதனைப் புரிந்து கொள்பவர்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தியாக உருப்பெற்றுள்ள தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு கொடுக்க முன்வர வேண்டும்.

சிறிலங்கா அரசு இஸ்ரேலியருடன் ராஜதந்திர உறவை ஸ்தாபித்துக் கொண்டமை பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு செய்யப்பட்ட மாபெரும் துரோகமாகவே நாம் கருதுகிறோம். இந்த நடவடிக்கையால் சிங்கள அரசானது அரபுநாடுகளுக்கும் இஸ்லாமிய உலகத்திற்கும் ஒரு எதிரி நாடாக மாறியுள்ளது. இதனைப் புரிந்து கொண்ட அரபு, இஸ்லாமிய நாடுகள் தமது கடும் எதிர்ப்பை சிங்கள அரசுக்கு தெரிவித்த வண்ணம் இருக்கின்றன. சவுதி அரேபியா, ஜோர்தான், சிரியா, ஈரான், லிபியா போன்ற நாடுகள் இலங்கை அரசுக்கு கடும் ஆட்சேபம் தெரிவித்திருப்பதுடன் ராஜதந்திர உறவுகளையும் துண்டிக்கப் போவதாக மிரட்டியிருக்கின்றன. அரபு நாடுகளினதும், இஸ்லாமிய உலகத்தினதும் இந்த நிலைப்பாடு ஈழத் தமிழரின் விடுதலை இயக்கத்திற்கு சார்பாக அமையும் என்றே நாம் கருதுகிறோம். அமெரிக்க — யூத ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எமது விடுதலைப் போராட்டத்திற்கு அரபு நாடுகள் கை கொடுத்து உதவும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம்.

### இன ஒழிப்புத் திட்டம் தீவிரமாக்கப்படலாம்

தென்னிந்திய கடல் எல்லைப் பிரதேசத்தில் உலக ஏகாதிபத்திய நாசகார சக்திகள் ஊடுருவி வருவதை இந்தியா அசட்டை செய்ய முடியாது. சிறிலங்காவில் நிலை கொண்டுவரும் அமெரிக்க-இஸ்ரேலிய-சீனக் கூட்டணியின் யுத்த சூழ்ச்சிகள் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்கை மட்டும் கொண்டதல்ல. இந்து மா சமுத்திரத்தை ஒரு அணுவாயுதப் பிரதேசமாக மாற்றி, இந்தியாவை சுற்றி வளைத்து, இந்திய நாட்டை சிதைப்பதும் இந்த நாசகாரிகளின் நோக்கமாகும். ஆகவே, இந்தியாவின் பாதுகாப்பிற்கே பெரும் ஆபத்தை விளைவிக்கும் அமெரிக்காவினதும் அதன் அடிவருடி நாடுகளினதும் சதி நடவடிக்கைகளை பாரத நாடு பார்த்துக் கொண்டிராது என்பதே எமது நம்பிக்கை. வட்டமேசை மகாநாடு மூலம் ஈழத் தமிழரின் தேசிய பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கம் எதுவும் ஜெயவர்த்தனா அரசுக்கு இல்லை என்பதை உணர்ந்து வரும் இந்தியா இனிமேல் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கும் என்றே நம்புகிறோம். ஈழத் தமிழினத்தின் இனக் கொலையைத் தடுத்து, உலக ஏகாதிபத்திய ஊடுருவலை முறியடிப்பதாயின் ஈழத் தமிழரின் தேசிய சுயநிர்ணய உரிமையை இந்திய அரசு அங்கீகரித்து அவர்களின் அரசியல் விடுதலைக்கு ஆதரவளிக்கவேண்டும். தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் பலம்பெறுவது மூலமே ஜெயவர்த்தனாவின் கொட்டத்தை அடக்க முடியும்.

ஒடுக்கப்பட்ட மக்களது விடுதலைப் போராட்டங்களின் ஒட்டுமொத்த சக்தியாகவே உலகப் புரட்சி வெடிக்கிறது. இந்த உலகப் புரட்சியானது ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரானது. எனவே, எமது விடுதலைப் போராட்டமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தமாக மாறுவது தவிர்க்க முடியாதது. எமது எதிரியான சிங்கள அரசு ஆட்டம் காணும்பொழுது ஏகாதிபத்தியம் கைகொடுத்து உதவும் என்பது எமக்கு ஏற்கனவே தெரிந்த விசயம். எத்தகைய ஏகாதிபத்திய சாத்தான்களையும் இலங்கை அரசு, உதவிக்கு அழைத்தாலும் எமது ஆயுதப் போராட்டத்தை நாம் முன்னெடுத்தே செல்வோம். யூத சையோனிஸ்டுகளுக்கு தமிழீழம் பிணக்குழியாக மாறும் என்பதை நாம் உறுதியாக சொல்ல விரும்புகிறோம். ஒ[illegible]தின் விடுதலை எழுச்சியை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது என்ற வரலாற்று உண்மையை சிங்கள இனவாத ஆளும் கும்பல் உணர்ந்து கொள்ளும் காலம் வெகுதூரத்தில் இல்லை.



















# மொசாட் பிணந்தின்னிகள்!



1917ல் பலஸ்தீனத்தின் குடித்தொகையில் 90 வீதத்திற்கும் அதிகமானோர் அரபு மக்களாவர். யூத மக்களின் குடித்தொகையோ 56,000 பேர் மட்டுமே. பலஸ்தீனத்தில் இந்த யூத மக்கள் 2·5 வீத நிலத்தையே தமக்கு சொந்தமாகக் கொண்டிருந்தனர். ஆனால், 1948ல் யூதர்கள் பலஸ்தீனத்தில் 80 வீதத்திற்கும் அதிகமான நிலத்தைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டனர். தங்களின் சொந்த மண்ணிலிருந்து அரபுகளை பலாத்காரமாக வெளியேற்றியதன்மூலமே இந்தக் காணிகள் யூதர் வசமாக்கப்பட்டன. இந்தப் பாரிய யூதக் குடியேற்றங்களை பலஸ்தீன அரபு மக்களின் மத்தியில் அமைக்கும் முயற்சியில் ஹகானா மட்டுமல்ல, இர்குன், அதற்குப் பின்வந்த ஸ்டேர்ன் போன்ற பயங்கரவாதக் குழுக்களும் வெற்றிகரமாக இயங்கியமைக்கு இந்த அமைப்புக்களின் உளவு வேலைகளே ஆதாரமாக அமைந்தன.

இந்த இர்குன் மற்றும் ஸ்டேர்ன் போன்ற பயங்கரவாதக் குழுக்களே மொசாட் அமைப்புக்கு முன்னோடியாக அமைந்தன. பலஸ்தீன மக்களின் இனப்படுகொலை, தங்கள் கொள்கைக்கு மாறான அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்தல் ஆகியவற்றை இஸ்ரேல் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பே இப்பயங்கரவாதக் குழுக்களும் தீவிரமாகச் செயற்படுத்தி வந்தன. 1948ல் பலஸ்தீனக் கிராமங்களிலும் 1953ல் லிபியாவிலும் புகுந்து சூறையாடி மக்களைக் கொன்று குவித்த ஈவிரக்கமற்ற கூட்டம்தான் மொசாட்டின் முன்னோடி. இஸ்ரேலியப் பிரதமர்களான பெகின், ஷமீர் போன்றவர்கள் மொசாட்டில் அங்கம் வகிக்கும் முன்பே இர்குன், ஸ்டேர்ன் போன்ற பயங்கரவாதக் குழுக்களில் தீவிரமாக இயங்கியவர்கள்.

ஐரோப்பாவிலிருந்தும் வட ஆபிரிக்காவிலிருந்தும் இடம் பெயர்ந்தோரின் முகாம்களிலிருந்து பிரித்தானிய அரசின் எதிர்ப்புக்கு மத்தியிலும் யூதர்களை ஒருவருக்கும் தெரியாமல் கடத்திவந்து பலஸ்தீனத்தில் குடியேற்றுவதற்கான பயங்கரவாத இயக்கமாக ஹகானா வெற்றிகரமாகச் செயற்பட்டது. இஸ்ரேலிய ஏஜண்டுகள் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலிருந்தும் ஆயுதங்களை ரகசியமாக வாங்கி யூதப் பயங்கரவாதிகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். பிற்காலத்தில் இஸ்ரேலிய உளவறியும் துறையை நிர்வகிக்கப்போகும் இந்த நபர்களுக்கு இவையெல்லாம் சிறந்த பயிற்சிக் களமாக அமைந்தன. 1948ல் இஸ்ரேலில் அதிகாரபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்ட மொசாட் போன்ற உளவு ஸ்தாபனங்கள் 1948க்கு முன்னரேயே இயங்கிய இர்குன், ஸ்டேர்ன் போன்ற பயங்கரவாதக் குழுக்களின் தொடர்ச்சியான வளர்ச்சியையே காட்டுகிறது.

ஹகானா இயக்கத்தில் விளைந்த -- சியோனிசத்தின் தந்தையும் இஸ்ரேலின் முதல் பிரதமருமான பென் கூரியன்தான் இஸ்ரேலிய உளவு அமைப்பை உருவாக்கினார். இஸ்ரேலிய உளவறியும் ஸ்தாபனங்களான (1) அமான் (2) ஷின்-பெத் (3) மொசாட் ஆகிய அமைப்புகளில் மொசாட் அமைப்பே சர்வதேச ரீதியில் செல்வாக்கானதும் நீண்ட சரித்திரத்தைக் கொண்டதுமாகும். மொசாத் தலைவர் இஸ்ரேலியப் பிரதமருக்கு மட்டுமே பதில் கூற வேண்டியவராவார்.

மொசாட் தான் 1948ற்கு முன்பு அலியா என்ற பெயரில் இயங்கி வந்தது. இராணுவ உளவறியும் பொறுப்பு முழுவதும் மொசாட்டிற்குரியதாகும். 1960களிலேயே உலகிலேயே பல நாடுகளுக்கு முன்னோடியாக கம்பியூட்டரோடு இணைக்கப்பட்ட எலக்ட்ரோனிக் சாவிக்கொரு முறையை உருவாக்கிக் கொண்டுவிட்டனர். இத்தகைய விஞ்ஞான ரீதியிலான முன்னேற்றங்களும் சேர்ந்து மொசாட்டின் நாசகார வேலைகளுக்குப் பேருதவி புரிந்தன.

1970களில் மொசாட்டின் கொள்கையானது அவர்களின் பயங்கரவாதத்தின் புதிய பரிமாணத்தைக் காட்டுகிறது. 1972ல் மொசாட் பலஸ்தீன மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்ற அரபுத் தலைவர்கள், புத்திஜீவிகளைக் கொலை செய்வதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தது. அமெரிக்காவின் சி.ஐ.ஏ. ஸ்தாபனத்திலும் மற்றும் பிரித்தானியா, தென் ஆபிரிக்கா, மேற்கு ஜேர்மனி, பிரேசில், இத்தாலி, ஜப்பானிலும்கூட மொசாட்காரர்க்குத் தகவல் கொடுக்கும் உளவாளிகளை வைத்திருக்கிறது. இவர்களின் கூட்டுச் சதியுடன் பலஸ்தீன அரபு மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்த அரசியல் தலைவர்கள் தொடர்ச்சியாகக் கொலை செய்யப்பட்டனர். மொசாட் கொலை பாதகர்கள் அபாரத் திறமையுடன் ஆட்களைத் தீர்த்துக் கட்டக் கூடியவர்கள். புற்று நோயினாலோ அல்லது மாரடைப்பினாலோ அல்லது தெரு விபத்தில் ஒருவர் இயல்பாக இறந்துவிட்டதாகப் பிறர் கருதும் வண்ணம் தங்களின் கொலை பாதகச் செயல்களைத் திறமையோடு இவர்கள் முடித்துவிடக் கூடியவர்கள்.

இந்தக் கொலை பாதக நடவடிக்கைகளையடுத்து, பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்களை நிர்மூலமாக்கும் திட்டத்தை இஸ்ரேலியப் பாராளுமன்றம் 1978 மார்ச் மாதம் நிறைவேற்றியது. இவ்வாறு சர்வதேசப் பயங்கரவாதத்தைத் தனது அரசாங்கக் கொள்கையாகப் பிரகடனப்படுத்த வெட்கப்படாத நாடுகளில் இஸ்ரேலும் ஒன்று. மொசாட்டின் கொள்கையே இஸ்ரேலிய அரசின் கொள்கை என்று கூறுமளவிற்கும் இஸ்ரேலிய அரசியல் தலைவர்கள் மொசாட் அமைப்பிலிருந்தே உருவாகும் அளவிற்கும் இந்த ரகசிய உளவு ஸ்தாபனத்திற்கும் இஸ்ரே

**மொசாட் நாசகாரக் கும்பல் திட்டமிட்டுக் கொலை செய்தவர்கள் பற்றிய சிறு பட்டியல் :**

**1972 டிசெம்பர் 8 :** பாரிஸில் பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதியான மஹ்மூத் ஹம்ஷாரி அவரது டெலிபோனுக்கு அடியில் வைக்கப்பட்டிருந்த ரேடியோக் கட்டுப்பாட்டுக் குண்டு வெடித்ததால் கொல்லப்பட்டார்.

**1973 ஜனவரி 24 :** அபாட்-அல்-சீர் சைப்பிரஸில் உள்ள நிக்கோஸியாவில் தனது ஹோட்டல் அறையில் குண்டு வெடித்து இறந்தார்.

**1973 ஏப்ரல் 6 :** பேசில்-அல்-குபைஸி பாரிஸில் ஒரு தெருவில் சுட்டுக் கொல்லப்படுகிறார்.

**1973 ஏப்ரல் 9 :** கமால் நாஸர், மஹ்மூத் யூசுஃப் நாஜர், கெமால் அத்வான் ஆகியோர் பெய்ரூத்தில் அவர்கள் தங்கியிருந்த வாடகை அறைகளில் கொலை செய்யப்பட்டனர்.


**1973 ஏப்ரல் 12 :** செய்த் மூச்சாஸிஸ் அதென்ஸில் உள்ள தனது ஹோட்டல் அறையில் குண்டுவெடித்ததில் கொலை செய்யப்படுகிறார்.

**1973 ஜூன் 28 :** முகம்மத் பௌடியா பாரிஸில் தனது காரில் குண்டு வெடித்து இறந்தார்.

**1974 ஜனவரி 12 :** இனந்தெரியாத மூன்று அராபியர்கள் சுவிற்சலாந்தில் ஜெனிவாவில் உள்ள ஒரு தேவாலயத்துக்கண்மையில் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

**1974 ஆகஸ்ட் 21 .** 'ஜெனட்' என்ற பெண் நெதர்லாந்தில் உள்ள தனது படகு வீட்டில் கொல்லப்படுகிறார்.

**1974 நவம்பர் 11 :** இனந்தெரியாத அரபு இளைஞன் ஸ்பெயினில் ஒரு பூந்தோட்டத்தில் கொல்லப்படுகிறான்.



**இஸ்ரேல் உருவாக்கப்படுவதற்கு முன் பாலஸ்தீனத்திலிருந்த யூதப் பயங்கரவாதக் குழுக்களுள் முக்கியமானது 'இர்குன்'. அரபுகளை விரட்டுவதிலும், அழிப்பதிலும் மிக மோசமான வழிகளைக் கையாண்டது இக் குழு - இனம் காணவியலாத திசையிலிருந்து குண்டுகள் பொழிந்தன; ஜன நடமாட்டம் அதிகமுள்ள மூலைகளில் டைம் பாம்கள் வெடித்தன; அரபுச் சந்தைகளினூடே வெடி மருந்து நிரப்பப்பட்ட கார்கள் தூளாகிச் சிதறின.**

**அந்த இயக்கத்தை அப்போது தலைவராக இருந்து வழி நடத்திய பெகின் பின்பு இஸ்ரேலின் பிரதமரானார்.**

**இஸ்ரேலின் இன்றைய பிரதமர் இட்ஜாக் ஷமீர் அந்த இயக்கத்தில் 1936ல் சேர்ந்தார். 1940ல் அதிலிருந்து விலகி 'ஸ்டெர்ன் கும்பல்' எனப்படும் அதிபயங்கரவாதிகளுடன் இணைந்தார். டெல் அவிவ் பிரதேச துணைத் தளபதியாக இயங்கியபோது 1941ல் பிரிட்டிஷ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். 42ல் தப்பிய ஷமீர் 'ஸ்டெர்ன் கும்பலின்' தலைமைத்துவத்தைக் கைப்பற்றி 48 வரை அதை வெற்றிகரமாகத் தன் கீழ்வைத்திருந்தார்.**

**ஸ்டெர்ன் கும்பலின் அழிவுத் திட்டங்களின் கீழ் நடந்த தனி நபர் கொலைகளில் பிரபலமானவை :**

**44ல் பிரிட்டிஷ் மத்திய கிழக்கு ராஜாங்க மந்திரி மொய்னே பிரபு கெய்ரோவில் கொல்லப்பட்டார்.**

**48ல் ஐ. நாவின் ஸ்வீடியப் பிரதிநிதி பேர்னடாட் கொலை செய்யப்பட்டார்.**

**ஷமீர் 46ல் பிரிட்டிஷாரால் மீண்டும் கைது செய்யப்பட்டு எரித்திரியாவிற்கு அனுப்பப்பட்டார். மீண்டும் அவர் தப்பி பாலஸ்தீனத்திற்குத் திரும்பிய போது, அங்கு இஸ்ரேல் என்ற நாடு நிணிக்கப் பட்டிருந்தது.**

**'மொசாட்'டில் 55ல் சேர்ந்த ஷமீர் பத்தாண்டுகளுக்குப் பின் அதிலிருந்து விலகி அரசியலில் நுழைந்து, சாதுரியமாகக் காய்களில் தாவி, உச்சகட்டமாக இஸ்ரேலின் பிரதமரானார்.**

O O O O


**நாஜி ஜெர்மனிக்கும் ஸ்டெர்ன் கும்பலுக்கும் இடையிலேற்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு சாராம்சம் :**

**'ஹிட்லர், போலந்திலுள்ள யூதர்களுக்கு யூதத் தீவிரவாதிகள் போர்ப் பயிற்சியளிக்க அனுமதிக்க வேண்டும். அவர்கள் பின்பு பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷாரைத் தாக்குவார்கள். இஸ்ரேல் உருவானவுடன் அது நாஜி ஜெர்மனியின் வழிமுறைகளுக்கும், வழிகாட்டுதலுக்கும் உட்பட்ட நட்பு நாடாக இருக்கும்.'**

**இரண்டாவது உலக யுத்த காலத்தில் பெய்ரூட்டில் ஜெர்மன் பிரதிநிதியுடன் இந்த ஒப்பந்தத்தை உருவாக்கிய ஸ்டெர்ன் கும்பலின் ஏஜண்ட் : இஸ்ரேலின் இன்றைய பிரதமர் இட்ஜாக் ஷமீர்.**



1981ல் வார்சோ ஹோட்டலில் அபு தாவுத் என்ற விடுதலைப் போராளியினை மொசாத் பயங்கரவாதிகள் கொலை செய்ய முயன்ற காட்சி.





அல்ஜீரியத் தேசிய நாடக அரங்கின் இயக்குநரான மொஹமட் பொடியா பாரிஸின் இடதுசாரி நாடக ஆர்வலர்கள் மத்தியில் பிரபல்யம் வாய்ந்தவர். அல்ஜீரிய விடுதலை முன்னணியின் சார்பில் பிரான்சில் சிறைவாசத்தையும் அனுபவித்த பொடியா மொசாத் பயங்கரவாதிகளால் அவரது காருக்குள் வைக்கப்பட்ட வெடிகுண்டு வெடித்ததால் 1973 ஜூன் 28ம் திகதி மரணமானார்.

சிய அரசுக்கும் நெருங்கிய பிணைப்பு உள்ளது.

மொசாட்டிற்கும் அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏ.க்கும் உள்ள ஒருங்கிணைவானது உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்குமே பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. பலஸ்தீன விடுதலைப் போராளியும் எழுத்தாளருமான கஸான் கணாஃபானியைக் கொலை செய்யும் திட்டத்தில் மொசாட்டும் சி. ஐ. ஏ. யும் இணைந்தே செயற்பட்டுள்ளனர். சி. ஐ. ஏ. ஏஜண்டான மில்ஸ் கோப்லண்ட் பெய்ரூட்டிற்கு வந்து சேண்ட் பீச் ஹோட்டலில் தங்கியிருந்து கஸானைக் கொலை செய்யத் திட்டம் தீட்டினான். இந்தக் கொலை முயற்சியில் பங்கு கொண்ட மொசாட் உளவாளிகளும் இதே ஹோட்டலிலேயே தங்கியிருந்தனர். கஸான் கொலை செய்யப்பட்டதும் இந்தக் கொலையாளிகள் லெபனானிலிருந்து தப்பிச் செல்வதற்கு பெய்ரூட்டில் அமெரிக்கத் தூதரகமே உதவி புரிந்தது.

சி. ஐ. ஏ. யின் துணையுடன் மொசாட் இன்று 3-ம் உலகநாடுகளில் கொழுந்து விட்டெரிகின்ற விடுதலைப் போராட்டங்களை நசுக்குவதில் அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கு நவீன ஆயுதங்களை வழங்குவதிலிருந்து எதிர்ப்புரட்சியாளர்களை ஊக்குவித்தல், நவீனமான சித்திரவதை முறைகளைப் பயிற்றுவித்தல், புரட்சிகரத் தலைவர்களைப் படுகொலை செய்தல் என்பனவற்றிலும் உறுதுணையாக இருந்து வருகிறார்கள். ஆபிரிக்காவில் தென் ஆபிரிக்கா, செனகல் போன்ற நாடுகளிலும் லத்தீன் அமெரிக்காவில் நிக்கராகுவாவின் எதிர்ப்புரட்சியாளர்களுடனும் எல் சல்வடோர், ஹெய்ட்டி, ஹொண்டுராஸ், சிலி ஆகிய நாடுகளின் ஒடுக்குமுறை அரசாங்கங்களுடனும் மொசாட் இணைந்து இந்நாடுகளின் புரட்சிகரச் சக்திகளை அடக்கி ஒடுக்கி வருகின்றன.

தமிழீழத்தின் புரட்சிகரப் போராட்டத்தை ஒடுக்க இலங்கையின் சிங்களப் பெருந்தேசியவாத அரசிற்கு உதவ மொசாட் முன்வந்துள்ள அதே வேளையில் லத்தீன் அமெரிக்க நாடான குவாத்தமாலாவிலும் மொசாட் நேரடியாகத் தற்போது பிரவேசம் செய்திருக்கிறது.

குவாத்தமாலா "கொலைகாரர்களின் சொர்க்கபுரி"யாக மாறி வருகிறது. இதுகாலவரை அரசியற் காரணங்களால் 80,000 பேர் கடப்பட்டு அல்லது சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக அல்லது காணாமல் போயிருப்பதாகப் பத்திரிகை அறிக்கைகள் கூறுகின்றன. ஒரு நாளில் குறைந்த பட்சம் பனிரண்டு பேராவது சர்வாதிகார அரசால் கட்டுக் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

குவாத்தமாலாவின் புரட்சிகரச் சக்திகளை மேலும் நசுக்குமுகமாக இஸ்ரேல், அமெரிக்கா, குவாத்தமாலா ஆகிய மூன்று நாடுகளும் இணைந்த எதிர்ப் புரட்சிகரத் திட்டம் இப்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. 200 இஸ்ரேலிய இராணுவ உயர் அதிகாரிகள் குவாத்தமாலாவின் ஒடுக்குமுறை அரசாங்கத்திற்கு விசேஷ பயிற்சி வழங்குமுகமாக குவாத்தமாலாவில் இறங்கியுள்ளனர்.

சியோனிஸமானது வெள்ளை இனவாதம், நாசிஸவாதம் ஆகியவற்றோடு இணைந்து நடத்திவரும் நாசகார வெறியாட்டத்தை மனுக்குலம் ஒரு போதும் மன்னிக்க மாட்டாது.



மொசாத் நாசகாரர்களால் தீர்க்க முடியாத 'நோய்க்குட்படுத்தப்பட்டு மரணமான டாக்டர் வாடி ஹதாத்தின் சாவினை அறிவிக்கும் பலஸ்தீன ஜனநாயக விடுதலை முன்னணியின் (PFLP) சுவரொட்டி





எலாயி கோஹென்

இஸ்ரேலின் மொசாட் உளவாளிகளில் மிகப் பிரசித்தமான பெயர் இது.

எதிரிகளின் படையணிக்குள்ளேயே புகுந்து மிகவும் வெற்றிகரமாக உளவு வேலை பார்த்தவன்.

கோஹென் எகிப்திலே பிறந்தவன். இவனது யூதப் பெற்றோர் இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பே சிரியாவிலிருந்து எகிப்திலே குடியேறினர். மொசாட்டின் பார்வையில், அரபு போலத் தோற்றமளிக்கும் கோஹென் உளவு வேலைக்குப் பொருத்தமானவனாகத் தெரிந்தான். மதிநுட்பமும் தைரியமும் மிகுந்தவன். சிரிய அரசாங்கத்தின் நம்பிக்கைக்கு உகந்தவனாக மாறி உளவறிவதற்காகக் கடுமையான உளவுப் பயிற்சிக்கு இவன் உட்படுத்தப்பட்டுத் தன் உளவுப் பணியைத் தொடங்கினான்.

இப்போது
எலாயி கோஹெனின் பெயர்
'கமால் அமின் தாபெத்'
பெய்ரூட்டில் பிறந்ததாகக் காட்டும் சான்றிதழ்கள்.

1960ல் கோஹென் தன் உளவுப் பணியை வெற்றிகரமாக ஆரம்பித்தான்.

1961ல் புவனஸ் அயர்ஸுக்குப் போய் அங்குள்ள சிரிய நாட்டு அரபு வர்த்தகப் பிரமுகர்களிடையே நன்கு பழகினான். வெளிநாடுகளில் வாழும் சிரியத் தேசபக்தர்கள் தாய் நாடு செல்ல அவாவுவதைப் போல இவனும் 1962ல் சிரியாவுக்குச் சென்றான்.

வெகுவிரைவிலேயே டமஸ்கஸ் சமூகத்தின் உயர்மட்டங்களிலே கோஹென் அநாயாசமாகப் பழகி வந்தான். சிரிய இராணுவ அதிகாரிகளுடனும் அரசியல்வாதிகளுடனும் மிக நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டான்.

இப்போது கோஹென் சிரியாவின் முக்கிய புள்ளி.

சிரிய வானொலியில் அறிவிப்பாளனாகவும் இயங்கினான்.

சிரிய ஆளுங்கட்சியின் தீவிரத் தொண்டனாக விளங்கினான். தீவிர சிரியத் தேசபக்தனாகவும் ஆழ்ந்த அறிவு நுட்பம் கொண்டவனாகவும் மதிக்கப்பட்டான்.

இவ்வாறு மூன்று ஆண்டு காலம் சிரிய அரசாங்க வட்டாரங்களில் சர்வ சாதாரணமாகப் பழகி நிறையத் தகவல்களைத் தேடிக்கொண்டான். தனக்குக் கிடைத்த தகவல்களைக் கவனமாகப் பரிசீலனை செய்து அவற்றில் நம்பகமானவற்றையே தினமும் டெல் அவிவில் உள்ள மொசாட் அதிகாரிகளுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தான்.


கோலான் மலைக் குன்றுகளிலே சிரியப் பாதுகாப்பு பந்தோபஸ்துகள், ஜோர்டான் நதிநீரை இஸ்ரேலுக்குச் செல்லாமல் திசை திருப்பும் சிரியாவின் திட்டங்கள், சிரிய இராணுவத்திற்கு வழங்கப்பட்ட சோவியத் ஆயுதத்தளவாடங்கள், சிரியப் போர் முறை அமைப்பு ஆகியன பற்றி கோஹென் வழங்கிய தகவல்கள் மொசாட்டின் நாசகாரத் திட்டங்களுக்கு இன்றியமையாதனவாக இருந்தன.

இந்த ஒற்றனின் மீது சந்தேகங்கொண்டு சிரியாவின் ரகசிய உளவுப் படையினர் இவனது வாசஸ்தலத்தைத் திடீரெனச் சுற்றி வளைத்த போது கோஹென் ட்ரான்ஸ்மிட்டர் மூலம் மொசாட் உயரதிகாரிகளுக்குத் தகவல் அனுப்பிக் கொண்டிருக்கும் நிலையில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான்.

சிரியா அரசாங்கம் விசாரணை செய்து கோஹெனுக்குத் தூக்குத் தண்டனை வழங்கியது. சிரியத் தேசபக்தன் போல நடித்து சிரியாவிற்கு எதிரான தேசவிரோதச் செயல் புரிந்த குற்றத்திற்கு டமஸ்கஸ் தலைநகரின் பகிரங்கச் சதுக்கத்தில் கோஹென் தூக்கிலிடப்பட்டான்.

1948ல் வன்முறை மூலம் இஸ்ரேல் உருவாக்கப்படுவதற்கு முப்பது வருடங்களுக்கு முன்பிருந்தே சியோனிஸக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதில் ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற நாடுகளில் சர்வதேச ரீதியில் பலமிக்க உளவு அமைப்புகள் ரகசியமாக இயங்கின. யூதர்களைச் சட்ட விரோதமாக இஸ்ரேலுக்குக் கொணர்ந்து குடியமர்த்துவதற்காக உருவான ஹகானா போன்ற ரகசிய சியோனிச அமைப்பின் வெற்றிக்கு உயிர்நாடியாய் அமைந்தது அதன் உளவுத் திறனேயாகும். உலகெங்கிலும் பரந்து காணப்பட்ட யூதமக்கள் அவ்வந்நாடுகளில் இரண்டறக் கலந்து அச்சமூகங்களில் பல்வேறு மட்டங்களிலும் செல்வாக்குடன் காணப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டு அந்த யூத மக்களின் அனுதாபத்தைச் சம்பாதித்து இந்த ரகசிய இயக்கங்கள் வெற்றிகரமாகத் தம் உளவு அமைப்பை ஸ்திரப்படுத்திக் கொண்டன.







# தமிழர் ஆதரவு

*லண்டன் நியூ ஸ்டேட்ஸ்மெனில் 27.4.84ல் வெளியான கட்டுரை*

சிறிலங்கா இராணுவம் மீண்டும் தமிழர் வாழும் வடபகுதியில் தன் வெறியாட்டங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளது. அப்பாவிக் குடிமக்கள் மீதும் எரிகின்ற கடைகள், வீடுகள்மீதும் தாறுமாறுகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளது. "இந்தியா டுடே" என்ற இந்தியாவின் பிரபல சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையே தமது இப்புதிய தாக்குதலுக்குக் காரணம் என்பதுதான்--சற்றுஅபத்தமாகத்தான் தெரிந்தாலும்--உத்தியோகபூர்வ விளக்கம். 'இடதுசாரிச் சார்புடைய' தமிழ் கெரில்லாக்கள் தென்னிந்தியாவில் பயிற்சி பெறுகிறார்கள் என்பதே இக்கட்டுரையின் சாராம்சமாகும்.

இக் கட்டுரை சிறிலங்காவில் மார்ச் 21-ல் வெளியாகியது. இரண்டு நாட்களில் லலித் அத்துலத் முதலி புதிய தேசிய பந்தோபஸ்து அமைச்சராக நியமனம் பெற்றார். மார்ச் 24ம் திகதி தனது இலட்சியமான பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் பணி வெற்றிபெற பௌத்த மகாநாயகக் தலைவர்களிடம் ஆசியை வேண்டினார். அடுத்த நாள் 2000 அதிரடிப் படைக் கூலிகளுடன் யாழ்நகர் சென்றடைகிறார்.

மூன்று நாட்களின் பின் 'கெடுபிடியான' பிரிகேடியர் செனிவரத்னவின் கீழ் இராணுவத்தினர் தமது கைங்கரியங்களை ஆரம்பிக்கின்றனர். சன நெருக்கடிமிகுந்த சுன்னாகம் சந்தையில் துப்பாக்கி ரவைகள் பொழிந்தன. எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். குறைந்தது 22 பேராவது காயமடைந்தனர். ஏப்ரல் 9ம் திகதி இராணுவ வாகனங்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதும் யாழ்நகரின் பிரதான வீதியிலுள்ள கடைகளை எரித்தும், அடைக்கல மாதாவின் தேவாலயத்தைத் தாக்கியும் இராணுவம் மீண்டும் தனது வெறியாட்டத்தை யாழ் நகரில் கட்டவிழ்த்துவிட்டது. ஆத்திரங்கொண்ட கத்தோலிக்க மக்கள் தம் வீடுகளிலிருந்து வெளியே வந்து வீதிகளில் இறங்கினார்கள். நீண்ட காலமாக இராணுவத் தளங்களாக உபயோகிக்கப்பட்ட பௌத்த கோயிலையும் சிங்களப் பாடசாலை ஒன்றையும் தாக்கினார்கள். சிங்களவர்கள் யாருமே காயமுறவில்லை. ஆனால் இராணுவமோ மக்கள் கூட்டத்தினுள் சுடத் தொடங்கியது. அப்போது 35 பேர் கொல்லப்பட்டனர்.

அன்றைய தினத்திலிருந்து மக்கள் தன்னிச்சையாக இராணுவத்தினால் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். பாரிய அளவில் மக்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். ஒரு கிராமத்தில் 40 பேரை சுற்றி வளைத்துப் பிடித்து கைது செய்துகொண்டு போய் விட்டனர். யாழ்ப்பாணத்தில், உடைந்து நொறுங்கிய கட்டிடங்களுக்கும், ஹெலிகொப்டர் ரோந்துகளுக்கும், அடிக்கடி அமுலாகும் ஊரடங்குச்சட்டத்துக்கும் மத்தியில் சிலர் உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்கின்றனர். வேறு சிலர்---நகரை விடுத்து கூடிய பாதுகாப்பை நாடி கிராமங்களுக்கு இடம் பெயர்கின்றனர்.

இப்புதிய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எத்தனையோ விடுதலை இயக்கங்கள் உரிமை கோருகின்றன. கடந்த வருட வன்செயல்களுக்குப் பின் தமிழர்கள் கெரில்லா நடவடிக்கைகளினூடாக இயங்கும் ஒரு தேசிய விடுதலை இயக்கத்திலேயே தமது அரசியல் உணர்வுகளை, தமது அரசியல் குரலை---வெளிப்படுத்துகிறார்கள் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. தமிழர்களின் பாராளுமன்றக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று மதிப்பிழந்துள்ளது. எல்லா விடுதலை இயக்கங்களும்--இந்தியாவில் தளமமைத்து இருந்த போதிலும் புலிகள் எனப் பொதுவாக அழைக்கப்படுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற இயக்கமே ஈழத்தில் அமைப்பு ரீதியாகவும், அங்கத்தவர்கள் என்ற ரீதியிலும் உண்மையான செல்வாக்குப் பெற்றுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற இயக்கம் - கடந்த 12 வருடங்களாக அரச பயங்கரவாதத்திற்கெதிராக அவ்வப்போது ஒளிந்திருந்து தாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஓர் எளிமையான அமைப்பைக் கொண்ட இளைஞர் இயக்கம் என்ற நிலையிலிருந்து கட்டுப்பாடுடன் கூடிய கெரில்லா அமைப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. அதன் செல்வாக்கு கிராமப் புறங்களிலேயே அதிகமாகவுள்ளது. "கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள மக்கள் தங்களைப் புலிகள் என சொல்லிக் கொள்ளாவிட்டாலும், புலிகளுக்குப் புகலிடமும் பாதுகாப்பும் தந்து அவர்களையே தங்கள் வருங்காலத்தின் நம்பிக்கையாகக் கருதுகிறார்கள். இதனால்தான் நாங்கள் அவர்கள் மத்தியில் 'கடலில் வாழும் மீன்கள்' போல நடமாடக் கூடியதாயுள்ளது" என்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் இலண்டன் பிரதிநிதி.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகளையும் துண்டுப்பிரசுரங்களையும் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள எல்லா நகரங்களிலும் சிறிய கிராமங்களிலும் கூடக்

# அஹிம்சையிலிருந்து

## இராசரத்தினம்

ஒடுக்குமுறையும்அடிமைத்தனமும் எங்கெங்கே ஆழமாக வேர் பாய்ச்சுகிறதோ அங்கெல்லாம் நியாயத்தின் தீர்ப்பைத் தேடி நேர்மையான நெஞ்சங்கள் கொதித்தெழுகின்றன: தேசத் தொண்டர்களும் தியாகிகளும் உருவாகிறார்கள். இத்தகைய பல தூய தொண்டர்களினதும், விடுதலைக்கான விதையையூன்றி அது வளர்த்திடத்தம் உதிரத்தையே கொட்டி வளர்த்தவர்களினதும் வரலாறு மக்களுக்குச் சரிவரத்தெரியாது இலைமறைகாய் போல இருந்து விடுகிறது.

சிங்கள எதேச்சாதிகார ஒடுக்கு முறையிலிருந்து தமிழீழத்தாயகம் விடுதலை பெறவேண்டும் என்ற உன்னத நோக்குடன் எழுபதுகளிலும் அதற்கு முன்பும் தூய பணியாற்றியவர்களில் அமரர் ஆ. இராசரத்தினம் அவர்களும் ஒருவராவார்.

இயல்பாகவே மொழிப் பற்றும் இனப்பற்றும் கொண்டவரான திரு இராசரத்தினம் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். சிங்களம் மட்டும் சட்டம் வருமுன்னரே எழுதுவினைஞராக அரசாங்க சேவையிலே சேர்ந்து கொண்டவர்.

1956இல் சிங்களம் மட்டும் சட்டம் வந்ததைத் தொடர்ந்து அவரது இன விடுதலை ஈடுபாடு அதிகரித்தது. 1956 முதல் 1961 வரை இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்கொண்ட அஹிம்சைப் போராட்டங்கள் அனைத்திலும் திரு. இராசரத்தினம், சிங்கள அரசின் ஊழியராக இருந்து கொண்டே ஈடுபாடு காட்டியிருக்கிறார்.

சிங்களம் மட்டும் சட்டம் வந்ததைத் தொடர்ந்து தமிழ் அரச ஊழியர்களுக்குத் தனியான மொழி வழிப்பட்ட, இனவழிப்பட்ட தொழிற்சங்கம் அவசியம் எனக்கருதி, "தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை" உருவாக்குவதில் முன்னின்று உழைத்து வெற்றி கண்டவர்.

ஸ்ரீலங்கா அரசியலமைப்பின் 29-வது விதியின்படி சிங்களம் மட்டும் சட்டம் சட்டவலுவற்றது என்று முன்னாள் நீதியரசர் திரு. கிறெஸ்ரர் அவர்களால் தீர்ப்பளிக்கப்பட்ட 'கோடீஸ்வரன் வழக்கில்' மிகவும் தீவிர அக்கறை காட்டி உழைத்தவர்.

1961-ஆம் ஆண்டு, தமிழீழ மடங்கிலும நடைபெற்ற அஹிம்சை வழிப் போராட்டமான சத்தியாக்கிரகம், மறியல் போன்ற மக்கள் போராட்டங்கள் சிங்கள இனவாத அரசின் இராணுவ அடக்கு முறையால் முறியடிக்கப் பட்டது கண்டு உள்ளம் கொதித்தவர்களில் இராசரத்தினமும் ஒருவர். வரலாற்றின் இந்தக் கசப்பான அனுபவங்களால் அவர் அஹிம்சை வழியில் நம்பிக்கை இழந்தார்.

1961 இல் சத்தியாக் கிரகம் முறியடிக்கப் பட்டு தமிழரசுக் கட்சி தடைசெய்யப் பட்டு, கட்சி உறுப்பினர்கள் தடுப்புக்காவலில் இருந்த போது...... திரு. இராசரத்தினம் மட்டும் சும்மா இருக்கவில்லை.

பல நண்பர்களையும் சேர்த்துக்கொண்டு அவர் வன்முறைப் போராட்டத்திலிறங்கினார். மிகவும் இரகசியமான முறையில் தலைமறைவு இயக்கம் செயற்பட்டது. அரசுக்குச் சொந்தமான பேருந்துகளுக்குத் தீவைக்கப்பட்டன; யாழ்ப்பாண அரசாங்கச் செயலகத்தையே நிர்க்கிரையாக்குவதற்குப் போடப்பட்ட திட்டம் சில எதிர்பாராத தடைகளால் கைகூடவில்லை. ஆயினும் அந்த முயற்சிக்கும் முனைப்புக்கும் யாழ்ப்பாணத்திலே அறுபதுகளிலேயே வித்திட்டவர்களில் திரு. இராசரத்தினமும் முக்கியமானவர்; முதன்மையானவர்.

சிங்களச் சட்டத்தைத் தொடர்ந்து அரசாங்கவேலையிலிருந்து சிங்களம் படிக்க மறுத்து ஓய்வு பெற்றுக் கொண்ட் திரு இராசரத்தினம், அதன்பின்பு தமிழீழப் புரட்சியாளர்களில் ஒருவராக மாறினார்.

எழுபது தொடக்கத்தில் இந்தியாவுக்கு வந்து தமிழ் நாட்டுத் தலைவர்களோடும், கட்சிகளோடும் தொடர்புகளை முதன் முதலில் ஏற்படுத்திக் கொண்ட பெருமையும் உரிமையும் இராசரத்தினத்துக்கே சொந்தம்.

1971 இல் திரு. இராசரத்தினம், தமிழ்நாட்டுக்கு திரு. அமிர்தலிங்கம், திரு.கோவை மகேசன் ஆகியோருடன் வந்து அறிமுகங்களை இன்னும் வளர்த்துக் கொண்டார்.

1972 இல் தமிழர் கூட்டணித் தலைவர் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை தமிழகத்துக்கு அழைத்து வந்து, தலைவர்களையும் பத்திரிகையாளர்களையும் சந்திக்க வைத்து, தமிழ்நாட்டுக்கு தமிழீழப்பிரச்சினையை அறிமுகம் செய்துவைப்பதற்கு காரண கர்த்தராக விளங்கியவரே இராசரத்தினம் அவர்கள்தான்.

1973 இல் யாழ்ப்பாணப் பாலத்தில் வைத்து, அன்றைய சிங்கள அரசின் கைக்கூலி குமாரசூரியர் சென்ற காரைக்குண்டு வைத்துத் தகர்க்க முயற்சித்தார் என்று கூறிச் சிங்களப் போலீசார் இராசரத்தினத்துக்கு வலை விரித்தனர். அந்த வலைக்குள் சிக்காமல், எப்படியோ தப்பித் தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்த இராசரத்தினம், தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்கு ஆயுதமேந்திப் போராடக் கூடிய கட்டுப்பாடான ஒரு புரட்சிகர இயக்கத்தைக் கட்டியெழுப்புவதில் தீவிரமாக ஈடுபட்டார்.

தமிழீழ மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமான, 'இலங்கை மீண்டும் எரிகிறது' என்கிற நூல் இலங்கையில் சிங்கள அரசுக்கு சினத்தையூட்டிய சிறிய நூல். அதன் பெரும்பாலான பகுதிகளை 'சேரன்' என்ற பெயருக்குள் மறைந்து நின்று எழுதியவர் இராசரத்தினமேயாவார். அதேபோல இராசரத்தினத்தால் எழுதப்பட்டு இலங்கையில் சிங்கள இனவாத அரசினால் தடை செய்யப்பட்ட மற்றோர் நூல், "Why Tamils Need a Nation" (தமிழர்கட்கு ஏன் ஒரு நாடு வேண்டும்?) என்பதாகும்.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் மட்டுமே தமிழீழத்தை அடையலாம் என்பதில் இராசரத்தினம் இறுதிக் காலத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். எளிமை, அடக்கம், ஓயாத உழைப்பு, இலட்சியப்பற்று என்பன இந்தத்தூய இலட்சியவாதியின் மிக நல்ல பண்புகளாகும்.

## முதலைக் கண்ணீர்

"இலங்கைத் தமிழ் மக்களின் நேதாஜி இங்கே உறங்குகிறார்"

—இது இராசரத்தினத்தின் இறுதியாத்திரையின் போது உதிர்க்கப்பட்ட வார்த்தைகள்.

"விரிந்த நெற்றி—அதிலே விழுந்திருக்கும் சிந்தனைச் சுருக்கங்கள் — நிறைந்த சிரிப்பு—ஒளி வீசிடும் கண்கள்—ஒல்லியான உடம்பு—திண்ணிய உள்ளம்—இவற்றுடன் எந்நேரமும் தமிழ், தமிழினம், தமிழ் ஈழ விடுதலை பற்றிய எண்ணங்களுடனே வாழ்ந்து வந்த அருமைச் சகோதரர் இராசரத்தினம் திடீரெனச் சொல்லாமல் கொள்ளாமல் மறைந்து விட்டதாக வந்த செய்தியை இன்னும் நான் நம்ப முடியாமல் தவிக்கிறேன்"

—இவை ஆவரோடு நெருங்கி உறவாடிய நண்பர் ஒருவரின் நெஞ்சிலிருந்து வந்தவை.

"அவர் தமிழரசுக்கட்சியின் விசுவாசம் மிக்க தொண்டர்களில் ஒருவராக இருந்து சேவையாற்றியவர். கட்சியில் மற்றும் அதன் கொள்கைகளில அசையாத நம்பிக்கையும் கொண்டிருந்தவர். கட்சியின் கட்டுப்பாடுகளுக்குப் பணிந்து செயலாற்றியவர்."

—இது தமிழர் கூட்டணித் தலைவர் என்.ஜே.வி. செல்வநாயகம்.

"தமிழ் இனத்தின் மீட்சிக்காகவும் தமிழர் உரிமைகளுக்காகவும் தமிழர்





# புலிகளுக்கே!

காணக் கூடியதாகவுள்ளது. சில வேளைகளில் பல பிரச்சினைகளில் மக்களுக்கு ஆலோசனை வழங்கு முகமாக உடனடியாக கூட்டங்களும் கூட்டப்படுவதுண்டு. உதாரணமாக மே 1983ல் புலிகள் உள்ளூர் தேர்தல் ஒன்றைப் பகிஷ்கரிக்குமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதன் பிரகாரம் -97 க்கு அதிகமானோர் வாக்களிக்கவில்லை. விடுதலைப் புலிகள் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்ட வேண்டிய சில பிரச்சினைகளிலும் வெற்றி கண்டுள்ளனர். கிராம அபிவிருத்தி சபைத்தலைவர் ஒருவர் ஒப்பந்தக் தொழிலாளர்கள் சிலரின் சம்பளப் பணத்தைக் கையாட முயன்ற போது விடுதலைப்புலிகள் 'எச்சரிக்கை' விடுத்தனர். அதன் பின்பே சம்பளப் பணத்தைக் கிரமமாகக் கொடுத்தார். இன்னுமொருமுறை இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக் இடையில் நிகழ்ந்த ஒரு சண்டையில் பொலிசார் இந்துக்களை மிரட்டி அவர்களை இக் கூட்டில் மாட்டி, சண்டையைத் தீர்க்கத் தவறிய போது விடுதலைப் புலிகளே தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்து வைத்தனர்.

தமிழ தேசிய வாதம் பல சிங்கள மார்க்ஸியவாதிகளின் ஏளனத்துக் குள்ளாகியுள்ளது. இருந்தும் விடுதலைப் புலிகளே வெகுஜன உணர்வுகளை பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாயுள்ளனர். உதாரணமாக கலவரம் நடைபெற்றபொழுது தென் னிலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து இடம் பெயர்ந்த தமிழ் மாணவர்களைத் திரும்பி வருமாறு நவம்பரில் அரசாங்கம் அழைப்பு விடுத்தது. விடுதலைப்புலிகளோ அவர்களை திரும்ப வேண்டாமென்று ஆலோசனை கூறி ஒரு பிரசுரமொன்றை வெளியிட்டனர். மாணவர்களும் இவ்வாலோசனைக்கு இணங்கி தெற்குக்கு திரும்பாமல் யாழ்பல்கலைக் கழக வளாகத்தில் மறியல் போராட்டங்களை ஒழுங்கு செய்து தமிழ பிரதேசங்களில்தான் தம் கல்வியைத் தொடர்வதற்கான தமது உரிமைகளுக்காகப் போராட ஆரம்பித்தனர். ஜனவரி 9-ம்திகதி ஒன்பது மாணவர்கள் தாமாகவே சாகும் வரை உண்ணுவிரதம் ஒன்றை ஆரம்பித்தனர்.

அரசாங்கமோ தன் பிடிவாதத்தைத் தளர்த்தவில்லை. ஒரு உண்ணுவிரதி உணர்விழந்த போது அதிகாரிகள் இராணுவத்தை அழைத்து பலாத்காரமாக உணவூட்டுவது பற்றி கலந்துரையாடத் தொடங்கினுர்கள். விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கங்களைச் சந்தித்து பின் பல்கலைக் கழக அதிகாரிகளின் கண்முன்னுலேயே ஒன்பது உண்ணுவிரதிகளேயும் இந்தியாவிற்குக் கடத்திச் சென்றனர். அப்பொழுது விடுதலைப் புலிகள் பொபி சான்ட்ஸும் ஐரிஷ் உண்ணுவிரதிகளும் எப்படி ஒரு பிடிவாதமான அரசாங்கத்தின் மனதை மாற்றத் தவறினுர்கள் என்பதை எடுத்துக் காட்டி சரியான தந்திரோபாயங்களைப் பிரயோகிப்பது பற்றியும் ஒரு பிரசுரத்தை வெளியிட்டனர்.

ஜயவர்த்தன அரசாங்கத்துக்கும், சிங்கள அரசுக்கும் பின்னுல் மேற்குலகின இராணுவப் பொருளாதார நலன்கள் அமைந்துள்ளன. இது தமிழர்களுக்கு மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வருடம் அமெரிக்க உதவியில் இயங்கும் ஸ்தாபனங்கள் தமிழக கிராமங்களுக்கு நல்ல குடிநீர் வழங்குவது பற்றி தமிழ்ப் பிரதேசங்களில் 'நன்னீர் ஆராய்ச்சி' நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. இந்நடை முறையின் போது முழுப் பிரதேசத்தினையும் பற்றிய மிக விரிவான தகவல்களைச் சேகரித்துள்ளனர். தமிழர்கள் இந்த ஆய்விறுல் பெறப் பட்ட தகவல்கள் இராணுவத்திற்குக் கையளிக்கப்படுமோ என்று இயுறுகின்றனர்.

அதே நேரம் தொடர்ச்சியாகப் பல அமெரிக்க அரசியல்வாதிகள் சிறிலங்காவுக்கு விஜயம் செய்து தம்மிடையேயுள்ள 'மிகச் சிறந்த உறவினை' உறுதி செய்து கொண்டுள்ளனர். சிறீலங்காவின் கடற்படைக்கு நவீன பயிற்சி அளிப்பதாக வாக்குறுதிகள் செய்யப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் தமிழ் ஈழ ஆதரவாளருக்கு எதிரான சிறிலங்கா தூதரகத்தின் முயற்சிகளுக்குப் பாராட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. இவையெல்லாவற்றிற்கும் அடிப்படையாக திருகோணமலையில் கடற்படைத்தளம் ஒன்றை அமைப்பதற்கான பிரகடனப் படுத்தப்படாத உடன்பாடொன்றுண்டு. இது வெளிப்படையாக நடைபெறும் வேளையில் திருமதி இந்திரா காந்தி தமிழ்த் தேசிய வாதிகளின் சார்பில் தலையிடுவது சாத்தியமாகாது.

தமிழீழக் காடுகளில் விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சி

விடுதலைப் புலிகளின் பிரமுக முகரான ஏ. எஸ். பாலசிங்கம் 'சண்டே' என்ற இந்தியச் சஞ்சிகையில் பின்வருமாறு கூறுகிறுர்:

"திருமதி இந்திரா காந்தி ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறுர். இலங்கை அரசாங்கம் எப்பொழுதுமே திருகோணமலையை ஒரு கடைசித் துருப்புச் சீட்டாகக் கையாண்டு வருகிறது. ஆனல் இதற்கு முன்னர் இந்தியா விடுதலைப் புலிகளை நசுக்க உதவுமேயானுல் தாங்கள் திருகோணமலையை வல்லரசுகளின் கெடுபிடியில்லாத ஒரு சுதந்திரப் பிரதேசமாக (தளங்கள் எதுவுமின்றி) வைத்திருக்க இணக்கம் தெரிவித்திருந்தது".

# ஆயுதத்தை நோக்கி

கூட்டணியில் ஓர் தீவிர உறுப்பினராக இருந்து தந்தை செல்வாவின் தலைமையின் கீழ் செயற்பட்ட செம்மல் அவர்"

—இது இராசரத்தினத்தின் இறுதியாத்திரையில் கண்ணீர் வடித்த சாவகச்சேரி எம். பி. யான வி. என். நவரத்தினம்.

"இராசரத்தினம் அவர்களின் மறைவின் மூலம் எங்கள் இயக்கம் எறும்பு போல் ஓயாமல் உழைக்கும் ஓர் உத்தமத் தொண்டனை இழந்து விட்டது...... இயக்கத்தினுல் தனக்கு என்ன லாபம் என்று கணக்குப் பாராது, தன்னுல் இயக்கத்துக்கு என்ன லாபம் என்று கணக்குப்பார்த்து வாழ்ந்தவர் நண்பர் இராசரத்தினம்"

—இது தமிழர் கூட்டணிச் செயலாளர்—நாயகம் அ. அமிர்தலிங்கம்.



தமிழீழத்து நேதாஜி என்றும் கர்மவீரர் என்றும் இலட்சியச் செம்மல் என்றும் இராசரத்தினம் இறந்தபிறகு குடங்குடமாய் கண்ணீர் விட்டு அவரது உடலின்மீது உதயசூரியன் கொடியைப் போர்த்தி அரசியல் வியாபாரம் செய்த அமிர்தலிங்கங்களும் நவரத்தினங்களும் அந்த லட்சியவாதி உயிரோடு வாழ்ந்த போது அவரது இறுதிக் காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை மனிதநேயங்கொண்ட எவனும் மன்னிக்கமாட்டான்.

தன்னுல் இயக்கத்துக்கு என்ன லாபம் என்று கணக்குப்பார்த்து வாழ்ந்த மனிதன் அதே இயக்கத்தால் கைவிடப்பட்டு அநாதாவாக்கப்பட்டு சென்னைத் தெருக்களிலே காசு இல்லாமல் பசிகொண்டு அலைந்த கதை துயரத் தோய்ந்தது. தொய்வு நோயின் அவதி ஒரு புறம்; பசிப்பிணி ஒருபுறம்; மனைவி, குழந்தைகளின் நிலைமை மற்றொரு புறம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடத்தின் மிகவும் இழிந்த துரோகத்தனத்திற்கு இராசரத்தினத்தின் கடைசிக்காலங்கள் தான் சாட்சி.

இராசரத்தினம் மறைந்த பிறகு அவரது மரண யாத்திரையில் கூட்டணி நடத்திய நாடகம் அதன் அரசியல் விபச்சாரத்தைச் சந்திக்குக் கொண்டு வருகிறது.

**அமிர்தலிங்கம், நவரத்தினம் போன்ற நடிப்புச் சுதேசிகளின் துரோகத்தனத்தால் ஒரு நேர்மையான நெஞ்சம் எவ்வாறெல்லாம் நொந்து போயிருந்தது என்பதனை இராசரத்தினம் விட்டுவிட்டுச் சென்றிருக்கும்மூன்று ஆண்டு கால காட்குறிப்புகள் (1973, 1974, 1975) நமக்குத் தெளிவாகவே எடுத்துக் காட்டுகின்றன. இராசரத்தினத்தின் காட்குறிப்பிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகிறோம்.**

[illegible]

நவம்பர் 20 Thursday வியாழன்

[illegible]

[illegible]

## கடல் விமானத்தின் மீது புலிகளின் அதிரடித்தாக்குதல்



1984 ஜூன் 15ம் திகதி விடுதலைப் புலிகளின் கெரில்லாப் படையினர் காரைநகர் கப்பந்தலத்திற்கருகில் பருத்தி யடைப்பு என்ற கிராமத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிலங்கா கடல் விமானத்தை வெற்றிகரமாக அழித் தெறிந்தனர்.


### விடுதலைப் புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகார பூர்வமான மாத இதழ்.

சந்தா விபரம்

ஒரு வருட சந்தா ரூபா. 25.00
(தபால் செலவு உட்பட)


விடுதலைப் புலிகள் பத்திரிகைக்கு சந்தாப் பணம் அனுப்ப விரும்புவோரும் அன்பளிப்பு செய்ய விரும்பு வோரும் P. THAYALAN என்ற பெயருக்கு காசோலை அல்லது மணி ஆர்டர் மூலம் அனுப்பலாம். பணம் அனுப் பும் அன்பர்கள் தமது பெயர், விலாசத்தைத் தெளிவாக எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விடுதலைப் புலிகள் பத்திரிகையுடன் தொடர்பு கொள் ளும் விலாசம் :


நிர்வாகி வினியோகப் பகுதி
த. பெ. எண்: 928
அடையாறு
சென்னை 20


# நினைவு அஞ்சலி

13.7.84
ரஞ்சன் என்ற கனக நாயகம் ஞானேந்திர மோகன்
பருத்தித்துறை.



13.5.84
மைக்கேல் பின்னா அமலதாஸ் 25
குருநகர்



26.5.84
ரகுபதி அருளம்பலம் 27
இரணை இலுப்பைக் குளம்

தாயகத்தின் விடுதலைக்கான
புரட்சிகரப் பயணத்தில்
இயக்க ரகசியங்களைக்
காக்க எதிரியிடம்
சிக்காமல் தங்கள்
உயிரையே மாய்த்துக்
கொண்ட தியாகிகளே,
உங்கள் உறுதியில்
உரம் பெற்று
உயரும் ஆயிரமாயிரம்
கரங்கள்
துவக்குகளுடன்.

30 6.84
ஸ்டீபன் ஆனந்தராஜா 25
அனலைதீவு

18.5.84
அன்னலிங்கம் பசீன் 25
மண்டைத்தீவு.





ஐயம்பிள்ளை மணிவாசகன் (வாசன்), 23
நெடுந்தீவு
வேதரத்தினம் மொரிஸ் ரெஜினல்ட் (சின்னக்கண்ணாடி எனப்படும் அலெக்ஸ்), 19 கொய்யாத் தோட்டம்

